RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

மலர்:- 28, 25 பெப்ரவரி 2022 இதழ்:- 44

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# தடை செய்யப்பட்ட அமைப்புக்களுடன் இயங்கும் சுமந்திரன் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? அரசுக்கு போட்டுக் கொடுக்கும் ரெலோ!

உலகத் தமிழர் பேரவை இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு. அதனுடன் சேர்ந்து இயங்கி இணைந்து அறிக்கை விடுகிறார் சுமந்திரன் எம்.பி. இவர் மீது இலங்கை அரசாங்கம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதில், அரசின் மறைமுக நிகழ்ச்சி நிரல் ஏதும் இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் பிரித்தானியாவுக்கான தலைவர் சாம். சம்பந்தன். (5ம் பக்கம் பார்க்க)

# பிரபாகரன் இறுதி வரை போராடியே மடிந்தார்! டக்ளஸிற்கு முன்னாள் இராணுவத்தளபதி சரத் பதிலடி!




தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிப் போரில் சரணடையவில்லை எனவும் அவரை இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கவும் இல்லை எனவும் அவர் இறுதிப் போர்க்களத்தில் இறுதி வரைப் போராடியே உயிரிழந்தார். எனவும் முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.(7ம் பக்கம் பார்க்க)

# உக்ரைனின் கிழக்கே டொன்பாஸில் தனி நாடுகளுக்கு புடின் அங்கீகாரம்! பூகோள அரசியல் போட்டியால் பூமிப்பந்தில் புதியதேசங்கள்!

உக்ரைன் நாட்டின் கிழக்குப் பகுதியில் டொன்பாஸ் பிராந்தியத்தில் கிளர்ச்சியாளர்களது கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு நிலப் பிரதேசங்களைத் தனி நாடுகளாக அங்கீகரித்திருக்கிறது ரஷ்யா. ஜனாதிபதி விளாடிமிர் புடின்நாட்டுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் தனிநாட்டு அங்கீகாரத்துக்கான பிரகடனத்தில் ஒப்பமிடவுள்ளார் என்பதை அறிவித்திருக்கிறார். (18ம் பக்கம் பார்க்க)

## உக்ரேன் - ரஷ்யா போர் மூண்டது! எவர் தலையிட்டாலும் பதிலடி - புடின்



## கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி! போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life Disability Income I Mortgage Life Travel & Visitor I Life Insurances. RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 416 841 9600

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Mortgage Alliance

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT




• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Markham & Brimortan




**Scarborough** **$1,850**
Bedrooms: 2 Washrooms: 2
All Utilities Included

### Derry/Goreway



**Mississauga** **$498,900**
Bedrooms: 2 Washrooms: 1
Great Opportunity First Time Buyers

### Burnamthorpe/Living Arts



**Mississauga** **$499,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Kitchen

### Kennedy / Hwy 401



**Scarborough** **$699,000**
Bedrooms: 2+1 Washrooms: 2
Approx. 790 Sq Ft.

### Yonge & Finch



**Toronto** **$819,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony

### Bleasdale/ Creditview



**Brampton** **$849,000**
Bedrooms: 3 Washrooms: 2
End Unit, Villa Freehold Home

### Park Rd S/Phillip Murray Ave


**Oshawa** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Close To Schools, Shopping

### Rossland And Ravenscroft


**Ajax** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen

### Mclaughlin/Elgin


**Brampton** **$949,000**
Bedrooms: 3+2 Washrooms: 4
Updated Kitchen, Pot Lights

### Brock & Dellbrook



**Pickering** **$1,299,000**
Bedrooms: 4+2 Washrooms: 4
Family Size Kitchen W/Out To Deck

### Markham/Ellesmere


**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated

### Ellesmere/Conlins



**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance

### Westney/Rossland


**Ajax** **$1,499,000**
Bedrooms: 4 Washrooms: 5
Over 4600 Sq Ft Of Living Space.

### Bovaird/Torbram


**Brampton** **$1,499,999**
Bedrooms: 3+2 Washrooms: 4
Brand-New Kitchen

### Richmond St W/Peter St



**Toronto** **$2,250**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout Of 790 Sq Ft

### Sheppard Ave E/ 404




**Toronto** **$2,600**
Bedrooms: 2+1 Washrooms: 2
Good Exposure W/Natural Light

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## கியூபாவிற்கான சுற்றுலா

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக
கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage)
உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து
நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி,
5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098

04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழ புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்


# கனடாவில் கடந்த வாரம் பிறப்பிக்கப்பட்டிருந்த "அவசரகாலநிலை பிரகடனம்" ரத்து

கனடாவில் அவசர நிலை பிரகடனம் ரத்து செய்யப்படுவதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ரூட்டோ அறிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு செல்லும் லொறி சாரதிகள் கட்டாயம் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் மற்றும் அமெரிக்காவில் இருந்து கனடா திரும்பும் லொறி சாரதிகளும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்தி இருக்க வேண்டும் என கனடா அரசு அறிவித்தது.

இதேவேளை, அமெரிக்கா சென்று விட்டு திரும்பி வரும் லொறி சாரதிகள் தடுப்பூ சி செலுத்தவில்லை என்றால் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவர் என்று கனடா அரசு தெரிவித்தது. மேலும், கொரோனா தொடர்பான கட்டுப்பாடுகளையும் அதிகரித்தது.



இதனைத் தொடர்ந்து கொரோனா தடுப்பூசி கட்டாயம் என்ற உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கனடாவில் லொறி சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் ஒரு பகுதியாக கனடா அமெரிக்காவை இணைக்கும் முக்கிய பாலமான தி அம்பாசிடர் பாலத்தை போராட்டக்காரர்கள் முடக்கினர்.

லொறிகள் பாலத்தில் நிறுத்தப்பட்டதால் கனடா - அமெரிக்கா இடையேயான போக்குவரத்து தடைபட்டது. இந்த சூழலில் லொறி சாரதிகளின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றதால் கனடாவில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து போராட்டக்காரர்களின் லொறிகளையும், அவர்கள் அமைத்திருந்த தற்காலிக கூடாரங்களை பொலிஸார் அப்புறப்படுத்தினர். இதன் மூலம் பல நாட்களாகக் கனடா தலைநகரில் ஏற்பட்டிருந்த அமைதியற்ற சூ ழல் முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில் கனடாவில் தற்போது லொறி சாரதிகளின் போராட்டம் முடிவுக்கு வந்ததை அடுத்து, அவசர நிலை பிரகடனம் ரத்து செய்யப்படுவதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் டுருடோ அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நிருபர்கள் சந்திப்பி பேசிய அவர், இன்று, நிலைமை இனி அவசரமாக இல்லை என்பதை உறுதிப்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, மத்திய அரசு அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்தும்'' என்று பிரதமர் ஜஸ்டின் ரூட்டோ தெரிவித்துள்ளார்.

# உக்ரேன் - ரஷ்யா போர் மூண்டது! எவர் தலையிட்டாலும் பதிலடி என்கிறார் புடின்!

உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 24 பெப் 2022 அறிவித்த நிலையில் உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான போர் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. இதையடுத்து உக்ரைன் மீது ரஷ்யா உடனடியாக தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

உக்ரைனின் தலைநகர் கியூவின் பல்வேறு பகுதிகளில் ரஷ்ய படைகள் தாக்குதலை மேற்கொண்டன. உக்ரைனின் 2ஆவது பெரிய நகரமான கார்கியூ மற்றும் கிராமட்டஸ் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒட்டேசா நகர் மீதும் குண்டு மழை பொழியும் சத்தம் கேட்பதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையில் எவர் தலையிட்டாலும் பதிலடி கொடுக்கப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதையடுத்து உக்ரைன் மீதான தாக்குதல் நடவடிக்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் தாக்குதலால் ஏற்படும் அழிவுக்கும் உயிரிழப்புகளுக்கும் ரஷ்யாவே காரணம் என்றும் ஜோ பைடன் கூறியுள்ளார். ஆயுதங்களை கீழே போட்டு விட்டு வீடுகளுக்கு செல்லுங்கள் என உக்ரைன் படைகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 5 ரஷ்ய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது

உக்ரேனின் லுஹான்ஸ்க் பகுதியில் ஐந்து ரஷ்ய விமானங்களும் ஒரு ஹெலிகொப்டரும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அந்நாட்டு இராணுவம் நேற்று வியாழக்கிழமை கூறியது. இந்த வார தொடக்கத்தில் ரஷ்யாவால் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்ட உக்ரேனில் உள்ள பிரிவினைவாத பிராந்தியங்களில் லுஹான்ஸ்க் ஒன்றாகும். இதற்கிடையில், ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் உக்ரேனிய வான் பாதுகாப்பு நடு நிலைப்படுத்தப்பட்டதாக கூறியுள்ளது.

### நாடு முழவதும் தாக்குதல்! -உக்ரேன்
### இராணுவத்தளங்கள் மீதே தாக்குதல் - ரஷ்யா

உக்ரைனின் கிழக்கு பகுதியில் மாத்திரமே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரஷ்யா தெரிவித்து வரும் நிலையில், நாடு முழுவதும் உள்ள இராணுவத் தளங்களில் தாக்குதல் நடத்தப்படுகிறது என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா இராணுவத் தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைனின் கிழக்கு பிராந்தியத்தில் தாக்குதல் நடத்தி வருவதாகவும், உக்ரைன் தங்களது இலக்கு இல்லை எனவும் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அறிவித்திருந்தார்.

ஆனால் உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட பகுதிகளில ரஷ்ய இராணுவம் விமானத் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் தற்பாதுப்பை மேற்கொண்டு வரும் உக்ரைன், ரஷ்யாவின் ஐந்து விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளது.

ரஷ்யாவின் தாக்குதல் குறித்து உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவிக்கையில், கீவ் பகுதியில் (4ம் பக்கம் பார்க்க)

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD - 14
(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART
4A WADE AVE
TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**6 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

## மொன்றியல் தொடர்புகளுக்கு
## மார்சே துர்க்கா
## (514) 276 9262

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# ஐ.நா.நாடுகள் மனிதஉரிமை ஆணையாளரின் 17 பக்க அறிக்கையில் இலங்கை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள்

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து கடும் விமர்சனம் காணப்படுவதாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் காணப்படாதமை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



பொலிஸாரினால் தடுத்து வைக்கப்படுபவர்கள் உயிரிழப்பதும் சட்டவிரோத படுகொலைகள் அதிகரித்துள்ளதும் குறித்தும் தெரிவித்துள்ள மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் சுயாதீனமாக இல்லை எனவும் தெரிவித்துள்ளது. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை குறித்து மேலும் தெரிய வருவதாவது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் 17 பக்க அறிக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவசர சீர்திருத்தங்களை மேற் கொள்வதற்கான அவசியம் குறித்து அதிகளவு வலியுறுத்தியுள்ளது.

பொலிஸாரினால் தடுத்து வைக்கப்படுபவர்கள் கொல்லப்படுவதும் சட்டவிரோத படுகொலைகளும் அதிகரித்துள்ளதாக மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம் நிலை மாற்றுக்கால நீதி மற்றும் பொறுப்புக்கூறலிற்கான முறையான நம்பகரமான புதிய திட்டமொன்றை உருவாக்கவில்லை என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் குறித்த விசாரணையில் போதியளவு முன்னேற்றம் ஏற்படவில்லை எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடனான கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் தனிப்பட்ட தலையீடு காரணமாக பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் கடுமையானவையாக மாற்றப்பட்டுள்ளன என ஜெனீவா இராஜதந்திரியொருவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த சர்வதேச விசாரணைக்கான அனுமதியை பரிசுத்த பாப்பரசரிடமிருந்து கோருவதற்காக கர்தினால் மல்கம் ரஞ்சித் வத்திக்கானிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். அவர் ஜெனீவாவிற்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சிவில் நிர்வாகத்தை இயக்குவதற்காக இராணுவ அதிகாரிகளை நம்பியிருப்பது குறித்தும் ஐநா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, கடந்த வருட அறிக்கையில் இராணுவ அதிகாரிகளை சிவில் நிர்வாக பணிகளில் இணைப்பதை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்ற வேண்டுகோள் இடம்பெற்றிருந்தது. கடந்த வருடம் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை இராணுவ மயப்படுத்தும் செயற்பாடுகள் தீவிரமாகியுள்ளன என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் ஊடகவியலாளர் சமுடித்த சமரவிக்கிரமவின் வீட்டின் மீதான தாக்குதல் சிவில் சமூக செயற்பாட்டாளர் செகான் மாலக கமகே கைது செய்யப் பட்டமை ஆகிய விடயங்களும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் இடம் பெறலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

சுயாதீன ஊடகங்கள் உட்பட சிவில் சமூகத்தினர் செயற்படுவதற்கான தளத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது. இனமத பதட்டங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கியநாடுகளிடம் ஏற்கனவே காணப்பட்ட பல தனிப்பட்ட தகவல்களை ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணைக்குழு அடையாளம் கண்டுள்ளது,மேலதிக தகவல் சேகரிப்பு நடவடிக்கைகளிற்கான குழுக்கள் மற்றும் மற்றும் முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்காக அந்த தகவல்களை குற்றவியல் நீதி அடிப்படையிலிருந்து மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் ஆராயவுள்ளது.

தனி நபர்களிற்கு எதிரான தடைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களத்தின் தடைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த விபரங்கள் செப்டம்பர் அறிக்கையில் இடம் பெறும்.

## உக்ரேன் - ரஷ்யா போர் மூண்டது!

(3ம் பக்கத் தொடர்ச்சி) உள்ள மக்கள் அச்சம் அடைந்து மெட்ரோ நிலையத்தில் தஞ்சம் அடைந்து வருகிறார்கள். நாடு முழுவதும் உள்ள இராணுவ தளங்களில் ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. நாங்கள் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என்றார். இந்தநிலையில் குடியிருப்பு பகுதிகளில் குண்டுகளை வீசவில்லை என்று ரஷ்யா விளக்கம் அளித்துள்ளது. உக்ரைன் நாட்டு மக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை. குடியிருப்பு பகுதிகளில் குண்டுகள் வீசப்படவில்லை. உக்ரைனில் உள்ள இராணுவ தளவாடங்கள் மீது மட்டுமே தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இராணுவ மற்றும் விமான தளங்களை குறிவைத்து ரஷ்ய இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

தொடர்ந்து உக்ரைன் மீது பல மணி நேரம் ரஷியா தாக்குதல் நடத்தி வரும் சூழலில், உக்ரைன் நாட்டின் விமான தளங்கள் மற்றும் வான்வெளி பாதுகாப்பு கட்டமைப்புகள் அழிக்கப்பட்டு விட்டன என ரஷ்யா தெரிவித்து உள்ளது. லுஹான்ஸ்க் நகரில் 5 போர் விமானங்களுடன் ரஷியாவின் ஹெலிகாப்டரை சுட்டு வீழ்த்தியுள்ளோம் என உக்ரைன் தெரிவித்து உள்ளது.


**மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**ரொறன்ரோ, கனடா வழங்கும்**

**மகாஜனன் இளைஞர் தமிழ், கணித, பொது அறிவுப் போட்டிகள் - 2022**

காலம்: February 27th 2022, 8.30 AM Sunday
பிரிவுகள்: தரம் ஆரம்பம் முதல் தரம் 12 வரை (From Grade SK to Grade 12)
இடம்: Toronto & Montreal

| ThamiZh Isai Kalaamantram<br>1120 Tapscott Rd.<br>Scarborough ON M1X 1E8<br>(Tapscott & McNicolle) | Murugan Temple, Montreal<br>1611 St Regis Blvd,<br>Dollard-Des Ormeaux,<br>Quebec, H9V 3H7 |
|---|---|
| குறிப்பு: 1. தமிழ் மொழிப் போட்டிகள் பிரிவு தரம் 3 முதல் தரம் 8 வரை மட்டும் இடம்பெறும்.<br>2. கணித, பொது அறிவுப் போட்டிகள் தரம் ஆரம்பம் முதல் தரம் 12 வரை இடம்பெறும்.<br>3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.<br>4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு 25 டொலர்கள் அறவிடப்படும். ஒரு குடும்பத்தில் 3 பிள்ளைகள்பங்குபற்றினால் 60 டொலர்கள் அறவிடப்படும். | விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:<br>Pl. Find below is our contest link for the contest registration page.<br>https://tinyurl.com/2p8esc9k<br>மேலதிக தொடர்புகளுக்கு:<br>Toronto : (226)750 5811, 416 451 8427, 416 918 5136, 416 726 0822<br>Montreal : 514 513 7940, 514 826 6218<br>விண்ணப்ப முடிவு திகதி: 23.02.2022 |

# தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் இயங்கும் சுமந்திரன் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? அரசுக்கு போட்டுக் கொடுக்கும் ரெலோ!

உலகத் தமிழர் பேரவை இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு. அதனுடன் சேர்ந்து இயங்கி இணைந்து அறிக்கை விடுகிறார் சுமந்திரன் எம்.பி., இவர் மீது இலங்கை அரசாங்கம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதில், அரசின் மறைமுக நிகழ்ச்சி நிரல் ஏதும் இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் பிரித்தானியாவுக்கான தலைவர் சாம். சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உலகத் தமிழர் பேரவை இணைந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்ராலினுக்கு கடிதம் ஒன்றை கடந்த 18ஆம்திகதி எழுதின. இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்நாடு முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடையது அல்ல என்று தமிழீழவிடுதலை இயக்கம் (ரெலோ) மறுத்துள்ள நிலையிலேயே சாம்.சம்பந்தனின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து கையொப்பம் வைத்து இந்தியாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினோம். அதில் 15 விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டு அத்தியாவசியமாக 13ஆவதுதிருத்தச் சட்டத்தையும் - மாகாண சபை தேர்தலையும் உடனடியாக நடத்த வேண்டும் என்றும் கோரியிருந்தோம்.

இந்தக் கடிதம் அனுப்பப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் பங்காளிக்கட்சிகள் கூடிப் பேசினோம். உங்களுக்குத் தெரியும் அன்றைய காலத்தில் இருந்து விடுதலைப் புலிகள் அ. தி. மு.கவுடனும், ரெலோ தி. மு. கவுடனும் உட்கட்சி அரசியலில் இருந்து தான் போராட்டத்துக்கு பல பின்னடைவுகளை கொண்டு வந்தன.

தமிழ்நாட்டின் ஆதரவு தளம் எங்களுக்குத் தேவை. நாங்கள் இங்கு எடுக்கும் சகல விடயங்களையும் பங்காளிக்கட்சிகளான 6 கட்சிகளுடனும் இணைந்து தான் விடயங்களை முன்னெடுக்க வேண்டும். இது தான் ஜனநாயக மரபு. எங்களுக்கு தலைவர் தங்கதுரை காலத்திலிருந்து தி. மு. கவுடன் தொடர்பு இருக்கிறது. நாங்கள் ஆறு கட்சிகளும் இணைந்து தான் தமிழ்நாடு முதலமைச்சரை சந்திப்பதற்கு நேரம் கேட்டிருந்தோம்.

உள்ளூராட்சி தேர்தல் அதன் வாக்குகள் அறிவிப்பு நடப்பதால் அதற்கு பின்னர் நேரம் தருவதாக தமிழ்நாடு முதலமைச்சர் எமக்குக் கூறியிருந்தார். இந்தச் செய்தி அவர்களுக்கு தெரியும். இந்த நிலையில், உலகத் தமிழர் பேரவை சுரேந்திரனும், சுமந்திரனும் இணைந்து இவற்றை செய்கிறார்கள். சுமந்திரன் பங்காளிக் கட்சிகளான எங்களுடன் கலந்தாலோசிக்காமல் விடயங்களை செய்கிறார். அந்த அறிக்கையிலுள்ள உலகத் தமிழர் பேரவை என்பது இலங்கையில் ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பு. இலங்கையில் ஒரு மாவீரர்தினத்துக்கோ - திலீபனின் தினத்துக்கோ ஒரு படத்தை பேஸ்புக்கில் பதிவிட்டால் சி. ஐ. டி. கைது செய்யும் நிலையுள்ளது

இவர்கள் (சுமந்திரன் - தமிழ் அரசுக்கட்சி) தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி. ஆனால், இவர்கள் அமெரிக்கா, கனடாக போகிறார்கள் தடை செய்யப்பட்ட அமைப்புடன் சேர்ந்து செயல்படுகிறார்கள். இணைந்து அறிக்கை விடுகிறார்கள். ஆனால், இவர்களுக்கு எதிராக இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதில் எதேனும் மறைமுக நிகழ்ச்சி நிரல் உள்ளதா?

13ஆம் திருத்தச் சட்டத்தை நாம்(ரெலோ) எடுத்த போது, இதே சுமந்திரனும் உலகத் தமிழர் பேரவையும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்துக்கு வந்து, அமெரிக்கா இதைவிடப் பெரிய தீர்வுத் திட்டத்தை தரப் போகிறது. ஜனவரி 15ஆம் திகதி அறிவிக்கப் போகிறது என்றார்கள். ஆனால், இப்போது பெப்ரவரி 15ஆம் திகதியும் கடந்துவிட்டது. எதுவும் நடக்கவில்லை. ஆனால், நாம் திட்டமிட்ட கூட்டத்தை நடத்தினோம். பின்னர் அதில், அவர்களும் கலந்து கொண்டனர். சம்பந்தன் ஐயா தான் தலைமை தாங்கினார்.

தமிழ் அரசுக் கட்சி தமது கட்சியை முன்னிலைப்படுத்துகிறது. ஆனால், நாங்கள் ரெலோ கட்சி தமிழ் மக்களின் நலன்களுக்காக ஆயுதப் போராட்டத்தை நடத்திய கட்சி. நாங்கள் பாராளுமன்ற அரசியலை முன்னிலைப்படுத்துவதில்லை. ஆறு கட்சிகளின் கூட்டத்தில் சம்பந்தன் ஐயாவையே தலைவரா ஏற்றோம். எங்கள் தலைவர் செல்வம் அடைக்கல நாதனை முன்னிலைப்படுத்தவில்லை. இதற்கு முன்னர் திண்ணையில் நடந்தகூட்டத்தில் கூட சிறீலங்கா முஸ்லிம் கட்சியின் தலைவர் ரவுப் ஹக்கீமையே முன்னிலைப்படுத்தியிருந்தோம்.

இப்போதிருக்கும் காலகட்டத்தில் தமிழ் மக்களுக்காக தனித்து எந்த ஒரு கட்சியாலும் தீர்வைக் கொடுக்க முடியாது. நாம் ஒரு பொது விடயத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அவர்களின் தனித்துவ விடயங்கள் இருக்கட்டும். ஆனால், நாம் பொது விடயத்தில் இணைந்து செயல்படவே ஆறு கட்சிகளின் கூட்டை உருவாக்கினோம். தேர்தலில் தனித்துப் பயணிப்போம். அது வேறு, ஆனால், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்றும் அவர் மேலும் கூறினார்.

# இராணுவம் தமிழின அழிப்புச் செய்யவில்லை! 2010 எனக்கான ஆதரவே தெளிவூட்டும்!- சரத்

2010ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை விடவும் எனக்கு அதிக வாக்குகள் கிடைத்தன. இதனால், இலங்கை படையினர் தம்மை துன்புறுத்தினார்கள் இனஅழிப்பு செய்தார்கள் என்பதை வடக்கிலுள்ள மக்கள் நம்பவில்லை என்பது தெளிவாகிறது.

இவ்வாறு 22 பெப் 2022 பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா. மேலும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிற்செல் பச்லெட் அமமையார் தான் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பை இழிவுபடுத்தக்கூடாது. விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களின் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களின் கதைகளின் ஒரு பக்கத்தை மட்டுமே நீங்கள் (மிற்செல் பச்லெட் )கேட்டிருக்கிறீர்கள். எனவே தான் எங்களுக்கு நீதி வழங்குமாறு கோருகிறோம். நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனத்தை இழிவுபடுத்துகிறீர்கள். நாங்கள் பயங்கரவாதத்தை ஒழித்து விட்டோம் என்று எங்கள் மீது நீங்கள் கோபமாக இருக்கிறீர்களா என்று உங்களை கேட்க விரும்புகிறேன்'',

விடுதலைப் புலிகள் ஒரு கொடிய பயங்கரவாத அமைப்பு. அவர்கள் அப்பாவி மக்களை கொன்று குவித்தார்கள். ஒருமுறை இந்தியப் பிரதமரையும் கொன்றார்கள். அரிசயல்வாதிகளை கொல்ல (15ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவப் பலவீனம்?

ஓர் இனத்தை வழிநடத்தும் தலைமை பலவீனமாக இருந்தால், அந்த இனத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் வெற்றி பெறப் போவதில்லை. யுத்தத்திற்கு பின்னரான கடந்த பன்னிரெண்டு வருட கால அரசியல் நகர்வுகளில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயங்கள் இடம்பெறாமைக்கு கூட்டமைப்பின் தலைமைத்துவத்திலுள்ள குறைபாடுகளே காரணமாகும். ஆனால், இப்போதும் அது அப்படியே தொடர்வது தான் கவலைக்குரியது.

கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்காவுக்கு நிபுணர் குழுவொன்று சென்று வந்தது. ஆனால், அது பற்றி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரியாது. இப்போது கூட்டமைப்பு உலகத் தமிழர் பேரவையின் கூட்டு அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஆனால் இது தொடர்பில் ஈழநாடு வினவிய போது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு இது தொடர்பில் எதுவும் தெரிந்திருக்கவில்லை. கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்கா சென்றிருந்த நிபுணர் குழுவுடன் புலம்பெயர் அமைப்புக்கள் சார்பில் உலகத் தமிழர் பேரவையும் இணைந்திருந்தது. இது தொடர்பிலும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அறிந்திருக்கவில்லை.

இவ்வாறான பல விடயங்கள் எந்த அடிப்படையில் நடைபெறுகின்றன? ஒருமுறை நடந்தால் அது தவறுதலானது. பலமுறை நடந்தால் அது திட்டமிட்ட ஒன்றாகும். இவ்வாறான விடயங்கள் தொடர்ந்தும் இடம் பெறுகின்ற போது ஏன் சம்பந்தன் அமைதியாகவே இருக்கின்றார்? சம்பந்தனால் எதனையும் கட்டுப்படுத்த முடியவில்லையா அல்லது சம்பந்தன் அவரின் தலைமைத்துவ தகுதியை முற்றிலுமாக இழந்து விட்டாரா அல்லது, கூட்டமைப்புக்கு தலைமை தாங்குவதற்கு சம்பந்தனால் முடியவில்லையா?

ஒருமுறை இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு - ஏனையவர்களுக்கு அறிவிப்பது எனது வேலையல்ல, என்றவாறு கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பதிலளித்திருந்தார். தனக்கு தரப்படும் வேலையை தான் செய்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறாயின் சம்பந்தனுக்கு தெரிந்தே அனைத்தும் இடம்பெறுவதாகவே, ஒருவர் இதனை புரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது. சம்பந்தனுக்குத் தெரிந்து தான் அனைத்தும் நடக்கிறதென்றால் - எதற்காக சம்பந்தன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை உதாசீனம் செய்கின்றார்? பங்காளிக் கட்சிகளுடன் இணைந்திருக்க அவர் விரும்பவில்லையாயின், அவர்களை தனி வழியில் செல்லுமாறு சம்பந்தன் கோர வேண்டும். அவ்வாறில்லாது, கூட்டமைப்பாக இருப்பதானால் அதற்குரிய அரசியல் ஒழுக்கத்துடன் சம்பந்தன் நடந்து கொள்ள வேண்டும்.

கூட்டமைப்புக்குள் இடம்பெறும் இது போன்ற விடயங்கள், தமிழ்மக்களின் உரிமை நோக்கிய அரசியலை பரிகசிப்புக்கு உரியதாக்கின்றது. இராஜதந்திர தரப்புக்கள் எவரை நம்பி பேசுவதென்னும் நிலைமையை தோற்றுவிக்கின்றது. இது தமிழ் மக்களின் உரிமை நோக்கிய நகர்வுகளை மோசமாகப் பாதிக்கக்கூடியது. சம்பந்தன் தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். அவரின் உடல் நிலை அதற்கு இடம் கொடுக்கா விட்டால் பொறுப்புக்களை ஏனைய கட்சியினரிடம் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும். இளம் தலைவர்களுக்கு இடமளிக்க வேண்டும் கூட்டமைப்பின் தலைமைத்துவம் என்பது மூன்று கட்சிகள் மனமுவந்து வழங்கியிருப்பது. அதனை சம்பந்தன் மதித்து நடக்க வேண்டும். சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக நடந்துகொள்ள வேண்டும். அவர் கூட்டமைப்பின் தலைவராக நடந்து(18ம் பக்கம் பார்க்க)

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# மாதா சொரூப விவகாரத்தில் ஞானசார தேரர் தலையிடுவதை தவிர்க்க இந்து கத்தோலிக்க மதத் தலைவர்கள் பேச வேண்டும் -அருட்தந்தை!



திருக்கேதீஸ்வரம் மாதா சொரூப விடயத்தில் ஞானசார தேரர் தலையிடுவதை தவிர்க்க மன்னார் ஆயர் உட்பட கத்தோலிக்க சமயத் தலைவர்களும், இந்து மதத் தலைவர்களும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு சமய நல்லிணக்கத்தை உறுதி செய்தல் வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் வலியுறுத்தியுள்ளார். திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு செல்லும் வழியில் வைக்கப்பட்டுள்ள மாதா சொரூப விடயம் தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வட கிழக்கில் குறிப்பாக மன்னார் பிரதேசத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையே சமய முறுகல் நீண்ட காலமாக தொடர்ந்து வரும் நிலையில் தற்போது திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு செல்லும் வழியில் வைக்கப்பட்டுள்ள மாதா சொரூப பிரச்சினை தொடர்பாக ஒரே நாடு ஒரே சட்ட செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தலையிடுவதை தவிர்க்க மன்னார் ஆயர் உட்பட கத்தோலிக்க சமயத் தலைவர்களும், இந்து மதத் தலைவர்களும் பேச்சுவார்த்தை ஈடுபட்டு சமய நல்லிணக்கத்தை உறுதி செய்தல் வேண்டும்.

இந்த நாட்டில் பௌத்த மற்றும் இந்து மக்களே பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். அரச சார்பற்ற அமைப்புக்கள் அறிக்கை தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். இது திட்டமிட்ட அரசியல் செயல் என குற்றச் சாட்டை முன் வைப்பதன் மூலம் கிறிஸ்தவத்திற்கும் ஏனைய சமயங்களுக்கும் இடையில் முரண்பாட்டை வலியுறுத்துவதோடு திருக்கேதீச்சர சமயப் பிரச்சினையை தான் தீர்க்கப் போவதாக குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே மடு தேவாலயம் காணிப்பிரச்சினை ஒன்றில் இந்து மக்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதையும் நாம் அறிவோம்.

பௌத்த துறவிகளையும், பௌத்தர்களையும் அதிகமாகக் கொண்ட தொல்பொருளியலாளர்கள் வடகிழக்கில் இந்துக்களின் பூர்வீக வழிபாட்டு தலங்களை ஆக்கிரமித்து சிங்கள பௌத்த மயமாக்குவதை எதிர்க்காதவர், வடகிழக்கில் யுத்தக் காலத்தில் சமயத் தளங்கள் மீது போடப்பட்ட குண்டுகளால் சேதமடைந்த வணக்க தலங்கள் தொடர்பிலும், அங்கு கொல்லப்பட்டவர்கள் விடயத்திலும் வருத்தம் தெரிவித்து நீதியை பெற்றுக்கொடுக்க முயற்சிக்காதவர் மன்னார் திருக்கேதீஸ்வர சுரூப விடயத்தில் இந்துக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க போகிறேன் என்பது அரசியல் உள்நோக்கம் கொண்ட கபட செயலாகும்.

அரசியல் ரீதியாக தமிழர்கள் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துகின்ற கால கட்டத்தில் தமிழர் தாயகத்தில் அக பிரச்சினையை தீர்க்க வெளி சக்திகள் அதுவும் ஞானசார தேரர் போன்ற சமய மற்றும் இன துவேஷம் கொண்டவர்கள் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தோடு சமய பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்கவும் இடமளிப்பது தமிழர்களின் எதிர்காலத்தை பாதிப்பதாகவும் அமைந்து விடும்.

ஆதலால் தேசிய பிரச்சினைக்கு நீதியை தேடும் வடகிழக்கு ஆயர்கள் சமய உட்பூசல்களுக்கு இடமளிக்காது காலத்திற்கு காலம் தோன்றும் உள்ளக சமய பிரச்சனைகளை தீர்த்திட அடி மட்டத்திலும், மேல்மட்டத்திலும் கலந்துரையாடல்களை ஏற்படுத்த வேண்டும்.

அவ்வாறான சூழ்நிலை இன்மை காரணமாகவே வெளிச் சக்திகள் உள்நுளைய முயற்சிக்கின்றன. இதனை தவிர்க்கவும், சமய நல்லிணக்கத்தை உருவாக்கி தாயக அரசியல் மீட்புக்காக ஒன்றுபட்ட சக்தியாக செயல்படவும் வடகிழக்கு சமயத் தலைவர்களின் அவசர சந்திப்புக்களை மேற்கொண்டு சமய உறவையும் நல்லிணக்கத்தையும் உருவாக்கிட அவசரமாக செயல்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை வரும் இந்தியப் பிரதமர் தமிழர்

((8ம் பக்கத் தொடர்ச்சி) அச்சுறுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார். தனக்கும் இக்பால் அத்தாஸஜீக்கும் தனிப்பட்ட விரோதங்கள் இருக்கவில்லை என தெரிவித்துள்ள ரத்நாயக்க, ஒரு நபரின் கோரிக்கைக்கு அமைய தான் சம்பவத்தில் சம்பந்தப் பட்டதாக கூறியுள்ளார்.

போர் நடைபெற்ற காலத்தில் கொழும்பை மையமாக கொண்டு இரகசியமாக இயங்கிய பிரிவில் இணைந்து தாம் செயற்பட்டு வந்ததாக கூறியுள்ள ரத்நாயக்க, பல சர்ச்சைக்குரிய தகவல்களை வெளியிட்டுள்ளார். விமானப்படையின் குறுப் கப்டன் சுகனபால தலைமையிலான புலனாய்வுப் பிரிவில் கீர்த்தி ரத்நாயக்க கடமையாற்றியுள்ளார். அத்துடன் கொழும்பில் இயங்கிய பாதுகாப்பு படையின் இரகசிய பிரிவில் இணைந்து செயற்பட்டு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

போர் நடைபெற்ற காலத்தில் உத்தியோகபூ ர்வமற்ற பல புலனாய்வு குழுக்கள் இயங்கியதாகவும் அதில் ஒன்றிலேயே தாம் கடமையாற்றியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கீர்த்தி ரத்நாயக்க தற்போது சிங்கள இணையத்தளம் ஒன்றின் ஊடகவியலாளராக செயற்பட்டு வருகிறார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students

Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.

Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை

பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# பிரபாகரன் இறுதி வரை போராடியே மடிந்தார்! டக்ளஸிற்கு முன்னாள் இராணுவத்தளபதி சரத் பதிலடி!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிப் போரில் சரணடையவில்லை எனவும் அவரை இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கவும் இல்லை எனவும் அவர் இறுதிப் போர்க்களத்தில் இறுதி வரைப் போராடியே உயிரிழந்தார். எனவும் முன்னாள் இராணுவத்தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வே.பிரபாகரன், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பின்னரே உயிரிழந்தார் என யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பிலேயே இறுதிப் போரில் இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இவ்வாறு தெரிவித்துள்ளார்

மேலும் பிரபாகரனின் சாவை வைத்து அன்று தொடக்கம் இன்று வரை சிலர் அரசியல் செய்து வருகின்றனர் எனவும் இராணுவத்தினருடனான நேரடி மோதலிலேயே பிரபாகரன் உயிரிழந்தார் என்பது உண்மை எனவும் அவரின் வெற்றுடலையே இராணுவத்தினர் மீட்டனர் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் ஒரு பயங்கரவாதக் குழுவின் தலைவர். எனினும், அவர் சிறந்த போர் வீரன். அதனால் அவர் மீது எனக்குத் தனிமரியாதை உண்டு எனத் தெரிவித்த சரத் பொன்சேகா பிரபாகரனை உயிருடன் பிடிக்க வேண்டும் என விரும்பிய இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் இலங்கை அரசுக்கு அன்று அழுத்தமும் கொடுத்த போதும் பிரபாகரன் எந்தத் தரப்பிடமும் சிக்காமல் இறுதி வரைப் போராடியே உயிரிழந்தார். எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.





# தலைவர் பிரபாகரன் சரணடைந்திருந்தால் அவரைக் கொன்றது யார்? பண்பு தெரியாத டக்ளசோ அரசோ பதில் சொல்ல வேண்டும் - சிவாஜி

பிரபாகரனின் இறப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் அமைச்சர்களின் மாறுபட்ட கருத்துக்கள், பித்தலாட்டங்கள் பொய் பிரட்டுக்களாக இருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார் யாழ். ஊடக அமையத்தில் 21 பெப் 2022 இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறப்புத் தொடர்பில் அரசாங்கமும் அரசாங்கத்தில் உள்ளவர்களும் மாறுபட்ட கருத்துக்களையே கூறி வருகின்றார்கள். இதன் மூலம் போர்க்குற்றம் நடந்தது என்பதை அவர் ஏற்றுக் கொள்கின்றார்கள். இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பண்பு தெரியாத வகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி வசைபாடியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியான ஈ.பி.டி.பி பற்றி பொது மக்களுக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு படுகொலைகள் அட்டூழியங்கள் புரிந்தார் என்பது தெரியும். 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரத்திற்காக ஊர்காவற்றுறை சென்ற போது ஈ.பி.டி.பி குண்டர்களினால் சுட்டும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் மூவருக்கு இரட்டை மரண தண்டனை தீர்ப்பு நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டது.

பிரபாகரன் உயிருடன் சரணடைந்தார் என்று டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார். இது முதல் தடவை அல்ல. அப்படி என்றால் சரணடைந்தவர்களை நீங்கள் படுகொலை செய்தீர்களா என்பதற்கு பதில் கூறவேண்டும். இறுதியுத்தத்தின் போது பிரபாகரனின் படம் என காண்பிக்கப்பட்ட படத்தில் நெற்றியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிரபாகரன் சரணடைந்திருந்தால் விசாரணை செய்திருப்பீர்கள் இலங்கை பூராகவும் பவனியாக கொண்டு சென்றிருப்பீர்கள். ஆனால் தற்போது குறித்த விடயங்கள் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணாகவே கூறி வருகின்றீர்கள். சரணடைந்த பின்னர் கொல்லப்பட்டார் என்பது உங்கள் கருத்து அவ்வாறு என்றால் இந்தப் போர்க்குற்றத்திற்கு யார் பொறுப்பு? இதற்கு யார் பதில் கூறுவது? அன்று இராணுவத் தளபதியாக இருந்த சரத்பென்சேகா, பிரபாகரன் ஒரு வீரன் கடைசி வரை போராடியே மறைந்தார் என்பதை கூறுகின்றார்.

படைத்தளபதியின் கீழ் இருந்த ஓய்வு நிலை ஜெனரல் கமால் குணரட்ண என்பவர் கழுத்தில் இருந்த இலக்கம் ஒன்று என்ற இலக்கத் தகட்டையும் பிஸ்ரலையும் கைப்பற்றினோம் எனக் கூறியுள்ளார். அவ்வாறு என்றால் பிஸ்ரலுடனா அவர் சரணடைந்தார். சரணடைவது என்றால் ஆயுதங்கள் இல்லாமல் தான் சரணடைவது. அவருடைய உடலை நாங்கள் புதைத்து விட்டோமென ஒரு சிலர் கூறினார்கள். எங்கு புதைத்தோம், யார் புதைத்தது என்பது கூறப்படவில்லை. இன்னுமொரு பகுதியினர் எரித்து விட்டு சாம்பலை கரைத்து விட்டோம் எறிந்து விட்டோம் என்றார்கள். ஒரு போர் வீரனது உடலுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பது மரபு.

பிரபாகரனது இறப்புத் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களையே அரசாங்கங்கள் கூறி வருகின்றது. பிரபாகரனின் உடலை அடையாளம் காண்பதற்காக கருணாவையும் தயா மாஸ்ரரையும் கூட்டிச் சென்றீர்கள். ஒருவர் கொல்லப்பட்டால் குறித்தநபர் இந்தியாவாலும் தேடப்படுகின்றார் என்றால் ஏன் அவரின் மரண விசாரணை நடைபெறவில்லை.

உலங்கு வானூர்தி மூலம் கருணாவை கூட்டிச் செல்ல முடியும் என்றால் ஏன் சட்ட வைத்திய அதிகாரியை கூட்டிச் சென்று மரண சான்றிதழை வழங்கவில்லை. இந்தியாவிற்கு ஒரு நீதிமன்ற சான்றிதழை வழங்கியுள்ளீர்கள் இதனை விட ஏன் டி.என்.ஏ. பரிசோதனை செய்யவில்லை. அன்றைய காலத்தில் பிரபாகரனின் தாயும் தந்தையாரும் பனாகொட இராணுவ முகாமில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

பிரபாகரன் எனக் காண்பிக்கப்பட்ட உடலை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒன்றில் அவர் தன்னைத் தானே மாய்த்திருக்கவேண்டும் அல்லது அவர் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்பதை வரலாறு கூறும். அதனை விடுத்து சரணடைந்தார் சடலத்தை எடுத்தோம் புதைத்தோம் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தால் எதற்காக பிரபாகரனின் தாயாரிடன் பிரபாகரன் எங்கு இருக்கின்றார் என விசாரணை செய்தீர்கள் என்பதற்கான பதிலையும் கூறவேண்டும். அல்ஜசீரா தொலைக் காட்சிக்கும் தாயார் இதனைக் கூறியுள்ளார். பிரபாகரனின் இறப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் அமைச்சர்களின் மாறுபட்ட கருத்துக்களானது பித்தலாட்டங்களும் பொய் பிரட்டுக்களுமே இருப்பதாகவே நாங்கள் உணருகின்றோம் என்றார்.

LAW OFFICE
of
THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

- FAMILY LAW:
  - Divorce
  - Separation
  - Property Division
- REAL ESTATE
- WILLS and ESTATES
- EMPLOYMENT LAW
  - ODSP, CPP disability
  - Wrongful Dismissal
  - Long-term Disability
- ADMINISTRATIVE LAW
- POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

- விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
- காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
- உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
- தொழில்சார் சட்டம்
- நிர்வாக சட்டம்
- சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# இலங்கை வரும் இந்தியப் பிரதமர் தமிழர் தீர்வுக்கு அரசுக்கு கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும்- சம்பந்தர்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கைக்கான தமது விஜயத்தின்போது தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவிடம் நேரில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

அதேவேளை தமிழர்கள் இங்கு எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமரிடம் பல விடயங்களை நேரில் பேசத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆவலாக உள்ளது எனவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

18 பெப் 2022 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, துணைத் தூதுவர் வினோத் ஜேக்கப், அரசியல்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பானு பிரகாஷ் ஆகியோரோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் எம்.எ.சுமந்திரனும் பேச்சு நடத்தினர்.

இதன் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார். மேற்படி சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தச் சந்திப்பில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி ஜெய்ஷங்கர் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிப் பேசப்பட்டன. அத்தோடு வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தியாவின் பங்களிப்பு பற்றி விரிவாக ஆராயப்பட்டது.



இலங்கைஇந்திய ஒப்பந்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் இலங்கையின் தமிழ்த் தேசிய பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தொடர்ந்து வந்த இலங்கை அரசுகள் இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறையை உருவாக்குவதாக இருந்தது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் பண்ணுவதில் இந்தியா தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கின்ற

அதே வேளையிலே தொடர்ந்தும் இந்தியா அந்தப் பங்களிப் பைச் செய்து இலங்கையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை யையும் சம்பந்தன் முன் வைத்தார்.

ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் வேறும் பல விடயங்கள் தீர்க்கமாக ஆராயப்பட்டன' என்றார்.

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் "றோ" விமானப்படை முன்னாள் புலனாய்வு அதிகாரி தெரிவிப்பு!

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இந்தியாவின் றோ புலனாய்வு அமைப்பு இருப்பதாக முன்னாள் விமானப்படை புலனாய்வு அதிகாரி கீர்த்தி ரத்நாயக்க கூறியுள்ளார்.


சந்திரிக்கா குமாரதுங்க சம்பந்தமாக பாரதூரமான விமர்சனத்தை முன்வைத்து சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் எழுதிய சொர ரஜின நூலின் பின்னணியில் பசில் ராஜபக்ச இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வலைஒளி தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

இந்திய தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்படும் ஆபத்து காணப்பட்டமை சம்பந்தமான தகவலையும் வெளியிட்டுள்ள அவர் இதன் பின்னர், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவை ஆட்சி அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்காக செயற்பாடுகளை முன்னெடுத்த பசில் ராஜபக்சவுக்கு நெருக்கமான முஸ்லிம் நபர் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸஜீக்கு துப்பாக்கியை காட்டி அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ரத்நாயக்க, சர்ச்சைக்குரிய மிக் விமான கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக தகவல்களை



வெளியிட்டமை காரணமாக தான் அவரை இவ்வாறு துப்பாக்கியை காட்டி (6ம் பக்கம் பார்க்க)

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

27 பெப்ரவரி 2022
ஞாயிற்றுக்கிழமை பிரதோஷ விரதம்

28 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை
மகாசிவராத்திரி விரதம்

முதல் ஜாமம்
6.00 மணிக்கு
உபயம்:- லிங்கராஜா மீரா குடும்பம்

இரண்டாம் ஜாமம்
9.00 மணிக்கு
உபயம்:- அருள் சுபா குடும்பம்

மூன்றாம் ஜாமம்
நள்ளிரவு 12.00 மணிக்கு
உபயம்:- கிருபா மதுரா குடும்பம்

நான்காம் ஜாமம்
அதிகாலை 3.00 மணிக்கு
உபயம்:- இளையபெருமாள் குடும்பம்

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை
மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# தமிழ்த்தேச அங்கீகாரமும் தனியரசுக் கோரிக்கையும்

## ஈழத்தமிழர்களது அடையாள மாற்றம்

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர் K.T. கணேசலிங்கம்



பொதுவெளியில் ஈழத்தமிழர் தொடர்பில் தனிநாட்டுக் கோரிக்கைக்கும் தேச அங்கீகாரத்திற்கும் இடையில் புரிதலின்றிய உரையாடல்கள் மேலெழுகின்றன. ஈழத்தமிழரது அரசியலின் வளர்ச்சிக் கட்டத்தை (Evolution) இனங்காணத் தவறும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் அத்தகைய தவறுகள் ஏற்பட முனைகின்றன. ஈழத்தமிழரது இன்றைய இருப்பானது பல நூற்றாண்டுகளாக தமிழர்களின் மூதாதையர் ஏற்படுத்திய அரசியல் சமூக வாழ்வியலின் தொடர்ச்சி என்பதை மறுக்க முடியாது. இது தமிழினத்தின் இயங்கியலின் ஒரு கட்டமேயாகும். மொழி மதம் பண்பாட்டு அடையாளங்கள் மற்றும் பொருளாதார இருப்பின் நியமமே இன்றைய வடிவமாகும்.




தேசியத்தின் பிறப்பென்பது 18ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய சிந்தனையாக இருந்தாலும் மனித குலம் அதனை பூகோள மயப்படுத்தியுள்ளது. அது சமானியர்களின் யுகமாகவே கட்டமைக்கப்பட்டது. முடியாட்சி முறைமைகளுக்கு எதிராக மக்களது திரட்சியே அத்தகைய தேசியத்தின் தோற்றமாகும்.

இன மத நிற சாதிய வேறுபாடுகளைக் கடந்து மக்களது திரட்சியே தேசியம் என்று சுருக்கமாக கூறிக்கொள்ளலாம். மக்கள் அரசியல் தீர்மானங்களில் பங்கெடுக்கும் ஜனநாயக ஈடுபாடு இல்லையாயின் அதனை தேசியம் எனக் குறிப்பிட முடியாது. மக்கள் தமக்குரிய விருப்புக்களை தீர்மானமாக எடுத்துக் கொள்வதே அவர்களது சுய உரிமையாகும். அதுவே சுயநிர்ணய உரிமையாகும். ஒரு சுயம் பிறருக்கு தீங்கில்லாத தன்னகத்தே சுயமாகச் செயல்படுவதும் சுயம் இன்னோர் சுயத்துடன் பரஸ்பரம் நலனடிப்படையில் ஒன்று சேருவதும் ஜனநாயகத்திற்கான அடிப்படைகளேயாகும். ஜனநாயம் என்பது உயிர்துடிப்புள்ள பண்பாட்டு அடையாளம். அது நாகரீகத்தின் முதிர்ச்சி.

ஈழத்ததமிழர் மன்னராட்சிக்குள் இருந்து விடுபட வழிவகுத்த பிரித்தானிய ஆதிக்கவாதம் தனது நிர்வாக நலனுக்காக ஒன்றையாட்சி மரபுக்குள் ஒன்றிணைத்தது. இலங்கைத்தீவின் பிரிதானிய அரசியலமைப்பால் கட்டப்பட்ட ஒன்றையாட்சி நியமத்திற்குள் ஈழத்தமிழர்கள் வலிந்து பிணைக்கப்பட்டார்கள். ஆனாலும் அவர்களது வாழ்விடமும் மொழியும் பண்பாட்டு அடையாளங்களும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

அதனை சுதந்திர இலங்கைக்குள் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக்குள்ளேயே தந்தை செல்வா சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தார். அது மட்டுமன்றி தந்தை செல்வாவுக்கு முன்பே ஆறுமுக நாவலரும் சேர் பொன் இராமநாதன் மற்றும் அருணாசலம் போன்றவர்கள் அதற்கான ஆரம்பப் புள்ளியை ஏற்படுத்தி விட்டார்கள். அதிலும் நாவலரும் அருணாச்சலமும் தமிழ்த் தேச அங்கீகாரத்திற்கான மொழி மத அடையாளங்களுடன் பண்பாட்டச் சேர்க்கையை முதன்மைப்படுத்தி தமிழ்த் தேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்தினார்கள். இவர்களது பங்களிப்பிலிருந்து மேலும் முன்னேறிய தந்தை செல்வநாயகம் அவர்கள் இரண்டு பிரதான விடயங்களை முன்மொழிந்தார்.

ஒன்று சமஷ்டிக் கோரிக்கை. சமஷ்டிக் கோரிக்கை என்பது வெளித் தோற்றத்தில் தமிழ் தேச அங்கீகாரம் போன்று அமைந்திருந்தாலும் அதன் உள்ளார்ந்த அர்த்தம் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணயத்தை கொண்டது. அமெரிக்காவின் அனுபவத்தை வைத்துக் கொண்டு நோக்கும் போது பிரிந்து செல்லவிடாது அதிகாரத்தை பகிர்ந்து கொண்டு பல தேசங்கள் ஒன்றிணைந்து இயங்குவதென்று குறிப்பிட்டாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக உலகம் முன் வைத்த ஒருவிடயமாக சமஷ்டி கருதப்படுகிறது. லெனின் தலைமையிலான சோவியத் ரஷ்சியாவின் சமஷ்டியானது அத்தகைய அர்த்தத்திலேயே இயங்கியது. அது ஸ்டாலின் யுகத்தில் தலைகீழானது வேறு விடயம். அதாவது சுயநிர்ணயம் என்பது ஒரு தேசிய இனமானது தனக்கென சுயாதிபத்தியமுள்ள ஓர் அரசை அமைப்பது. அல்லது ஓர் அரசமைப்பிலிருந்து பிரிந்து தனியரசை அமைப்பது அல்லது அவ்வாறு பிரிந்து இன்னோர் அரசுடன் இணைந்து கொள்வது அல்லது தனியரசாக இருக்கும் ஓரரசு இன்னோர் அரசுடன் இணைவது எனக் கொள்ளப்படுகிறது. இன்னோர் அர்த்தத்தில் சுயநிர்ணயம் ஆனது ஓர் அரசின் இறைமை இன்னோர் அரசினால் மீறப்படாது அல்லது தலையிடாது இருத்தலாகும். அந்த வகைக்குள் பார்த்தால் சமஷ்டி சுயநிர்ணயத்தின் பால் பட்டதென்பது தெளிவாகிறது.

இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம். இது தந்தை செல்வாவின் தலைமையில் ஈழத்தமிழரது தனியரசமைப்பதற்கான தீர்க்கமான வெளிபாடே வட்டுக் கோட்டைத் தீர்மானமாகும். அதாவது சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட அதே தரப்பே தனியரசுக்காக பிரிந்து செல்லும் தீர்மானத்தை தமிழ் மக்களிடம் முன்வைத்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டது.

1944 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை கம்யூனிசக் கட்சி தமிழர்கள் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய தேசிய சுயநிர்ணய உரிமையை உடையவர்கள் என்பதை பிரகடனப்படுத்திய 35 வருடங்களுக்க பின்னர் வட்டுக் கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதிலிருந்தே மூன்றாவது கட்டம் ஈழத்தமிழரது அரசியல் பரப்பில் மேலெழுகின்றது. அத்தகைய கட்டத்தை ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அனைத்தும் மேற்கொண்டன. அதனை தமிழீழ விடுதலைப்புலிகள் தனித்துவமாக கொண்டு செயல்பட்டனர்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் மிதவாத சக்திகளால் முன்வைக்கப்பட்ட போது ஈழத் தமிழர்கள் வளர்ச்சி பெற்ற ஒரு தேசிய இனமாக வரலாற்றில் நிலை நிறுத்தப்பட்டதுடன் அதற்கான வரலா



ற்று இருப்பையும் மொழியையும் பண்பாட்டையும் பொருளாதாரத்தையும் கொண்டவர்கள் என்பதை இலங்கைத் தீவு மட்டுமல்ல உலகமே ஏற்றுக் கொண்டது.

இதன் அடுத்த கட்டமே தனியரசுக்கான போராட்டமாகும். மிதவாதம் தீர்மானங்களை முன்வைத்து அகிம்சை ரீதியில் போராடியத. ஆனால் இளைஞர்கள் பிரிந்து செல்வதற்கான ஆயுதப் போராட்டத்தை செயல்பூர்வமாக ஆக்குவதில் முனைப்புக் காட்டினர். அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தனியரசொன்றையே நிர்வகித்தார்கள். அதாவது பலமான ஆயுதப் படைகளைக் கொண்ட விடுதலைப் புலிகள் தனித்து தனியரசுக்கான ஆயுதப் போராட்டத்தை நிகழ்த்தியதோடு ஓர் அரசை கட்டமைத்தார்கள்.

முப்படைகளையும் கொண்ட அரச இயந்திரத்தை நிறுவியது மட்டுமல்லாது அத்தகைய அரசுக்கான சட்டவாக்கம் நிர்வாக இயந்திரம் நீதிக் கட்டமைப்பு என்பவற்றை நிறுவினர் அது மட்டுமன்றி இறைமை கொண்ட அரசுக்கான நியமங்களாக கடலிலும் தரையிலும் ஆகாயத்திலும் எல்லை வகுத்து அதில் வாழும் மக்களது உரிமைகளையும் சட்ட ஒழுங்கையும் பொருளாதார வாய்ப்புக்களையும் சமத்துவத்தையும் பாதுகாப்பதில் கவனம் கொண்டனர். ஆயிரம் விமர்சனம் இருந்தாலும் விடுதலைப் புலிகள் ஓரசைக் கட்டமைத்து அதன் நிர்வாக அமைப்பையும் தேசிய இருப்பையும் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினர். அதாவது தனியரசுக்காக பிரிந்து செல்லும் போராட்டத்தையும் அதற்குரிய தனியரசையும் சமதளத்தில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் அமுல் படுத்தி வந்தனர்.

2009களுக்கு பின்னர் அத்தகைய நிலை முற்றாகவே தலை கீழானது. மீளவும் தனியரசை அமைத்து நிர்வாக கட்டுப்பாட்டுக்குள் இயங்கிய மக்கள் இலங்கைத் தேசியத்துக்குள் உட்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக ஈழத்தமிழர்கள் தேசியமாக இல்லை என்றோ பிரிந்து செல்வதற்கான தனியரசை கோரவில்லையென்றே அல்லது அதற்கு தலைமை தாங்கிய தலைமைகளும் அமைப்புகளும் தனியரசைக் கோரவில்லையென்றே வாதிக்க முடியாது. ஈழத்தமிழர்கள் ஓர் அரசியல் சமூகமாக தம்மை தக்க வைப்பதில் கரிசனையுடனேயே இயங்குகிறார். அது ஈழத்தமிழரது வரலாற்றில் ஒரு காலப் பகுதி நியமம். அதனை நிராகரிக்கவோ திரிபடுத்தவோ முடியாது. வரலாறு வரலாறாகவே உச்சரிக்கப்பட வேண்டும். எத்தகைய உன்னதமான இலட்சியமானாலும் செயல்பூர்வமான வடிவத்தை அது கொண்டிருக்க வேண்டும்.

அத்தகைய வாய்ப்புக்களை கொண்டிருக்கவில்லை எனின் இறுதியில் அது எதிர்கணியமான பயனையே அளிக்கும். அதனால் எதிரியே அதிக நன்மைய வாய்ப்பு ஏற்படும். நன்றி— அருவி இணையம்

மிஸிசாகா பகுதிகளில் மிகச் சிறப்பாக இயங்கும்
south indian உணவகத்திற்கு
முழுநேர - பகுதி நேர வேலையாட்கள் உடனடியாகத் தேவை
parotta , roti, kothu parotta/ kothu Roti, Dosa and other south indian dishes (பரோட்டா, றொட்டி, கொத்துப் பறோட்டா, கொத்து றொட்டி, தோசை, வடை உட்பட) தென்னிந்திய உணவு வகைகள் தயாரிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த சமையல்காரர் (chef / cook / kitchen helper) குசினி உதவியாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.
Restaurant address:
3870 Eglinton Avenue West, Unit 52, Mississauga, ON, L5M 2R9
Contact phone number : 647-535-6167

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.


எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

19 பெப்ரவரி 2022 முதல் 25 பெப்ரவரி 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு தினம் 20 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மாசிலாமணி கனகாம்பிகை

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.மணிக்கூட்டு ஒழுங்கை நீராவியடியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மாசிலாமணி கனகாம்பிகை அவர்களது 12வது ஆண்டு நினைவுநாள் 19 பெப்ரவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மாசிலாமணி கனகாம்பிகை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சீனித்தம்பி செல்வம்

அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 12வது ஆண்டு நினைவுநாள் 18 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 23 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு நல்லையா மகேந்திரன்

பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 25 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நல்லையா மகேந்திரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை அருளானந்தம்

வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கனகசபை அருளானந்தம் அவர்களின் 16வது ஆண்டு நினைவு தினம் 23 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை அருளானந்தம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு விஸ்வலிங்கம் சின்னத்தம்பி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சின்னத்தம்பி (ஓவசியர்) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 25 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் கனகசபை ஐயாத்தைப்பிள்ளை கல்விக்கழகம் ஸ்கந்தபுரம் கிளிநொச்சி (போசகர் விஸ்வலிங்கம் சின்னத்தம்பி ஓவசியர்) நிர்வாக கனடா அமைப்பு அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு விஸ்வலிங்கம் சின்னத்தம்பி (ஓவசியர்) அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



18 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமை அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 13வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



19 பெப்ரவரி 2022 சனிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.மணிக்கூட்டு ஒழுங்கை நீராவியடியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி மாசிலாமணி கனகாம்பிகை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் இசைஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்ஜோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது 3வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



21 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை கனடா குடும்ப உறவுகள் தின அன்பளிப்பாக கனடாவில் வசிக்கும் திரு கோணேஸ்வரன் இராசையா குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



21 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி லக்ஷன் ரூபநிகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆத்விக் செல்வப்புதல்வி ஏரியானா சகோதரங்களின் 3வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் சகோதரங்கள் இருவரும் தமது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



22 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் மிதுலன் நந்தகுமாரின் 14வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் மிதுலன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



23 பெப்ரவரி 2022 புதன்கிழமை நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்ளது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



23. பெப்ரவரி 2022 புதன்கிழமை வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கனகசபை அருளானந்தம் அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



24 பெப்ரவரி 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி எட்வின் நிஷா தம்பதிகளின் செல்வப்புதல்வி டியாறா எட்வினின் 5வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி டியாறா எட்வின் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



25 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமை பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது 31ம்நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 பெப்ரவரி 2022 வெள்ளிக்கிழமை நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சின்னத்தம்பி (ஓவசியர்) அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் கனகசபை ஐயாத்தைப்பிள்ளை கல்விக்கழகம் ஸ்கந்தபுரம் கிளிநொச்சி (போசகர் விஸ்வலிங்கம் சின்னத்தம்பி ஓவசியர்) நிர்வாக கனடா அமைப்பு. அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளு க்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் இசை ஆசிரியர் அமரர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 20 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# Amma Pawn Broker
## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0%** முதல் **1.5%** வரை

## அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

---

# TAX CENTRIC

2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph




- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

## Gayatiri Thavan

Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**

---



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
Scarborough, ON M1V 1V2
Mahindan.mailvaganam@rbc.com

Cell: 416-262-4973

## Insurance can seems confusing It doesn't have to be.

*We'll help you get it.*

**Talk to an RBC Insurance advisor in your neighbourhood today**

*We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.*

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம்
அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால்
பெரும்பாலும் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance®
Life | Health | Auto | Home | Travel | Wealth

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**


Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com







# OM SIVA SHAKTHI ASTROLOGER CENTER

## Master : KASHI GURUJI

Over 40+ Years of Experience



**Horoscope, Hand & Face Reading, Know your Past, Present & Future**

**கைரேகை, எண்ஜோதிடம், ஜாதகம் விளக்கம், வெத்திலையில் மை போட்டுப் பார்த்தல், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி அறிதல்**



- ★கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை
- ★சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு
- ★திருமணயோகம், காதல் விவகாரங்கள்
- ★தொழில், மனை அபிவிருத்தி, முன்னேற்றம்
- ★லட்சுமி கடாட்சம், வாகனம், மனைப் பொருத்தம்
- ★விசா பிரச்சனைகள், கோர்ட் வழக்கு
- ★ஆரோக்கியம், செய்வினை கோளாறு
- ★பேய், பிசாசு, எதிரிகள் தொந்தரவு
- ★கண் திருஷ்டி, நாக தோசம் போன்ற

சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.

உடனே பண்டித் காசி குருஜியை சந்திக்கவும். All Religions welcome.

- ★Money Blessings
- ★Love Problem
- ★Health Problem
- ★Relationship Problem
- ★Husband & Wife Disputes
- ★Family Arguments
- ★Depression
- ★Sexual Problem
- ★Business Problem

PRIVATE & CONFIDENTIAL

- ★Peoples's Jealousy
- ★Enemy Problem &
- ★Marriage Problem

Get all your problems solved.

Specialist in bringing back loved ones.

**Black Magic Removal in 24hours.**

Open 7 days

100% Result Guaranteed. Give life long protection

Call for Appointment

**647-324-9991 | 437-833-7796**

Unit 16, 2857 Lawrence Ave East Scarborough,M1P 2S8 / 2891 A, Derry Road East Mississauga, ON, L4T 1A6

# இந்தியாவின் பதில் என்ன?

இந்தியப் பிரதமர் மோடி கொழும்பில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வர இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் இந்திய அரசாங்கம் அதனை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.

அவ்வாறு நரேந்திர மோடி இலங்கைக்கு வருவாராக இருந்தால் இங்கே அவர் தனக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை முன் வைத்த ஆறு கட்சிகளையும் சந்திப்பாரா?

அவர் சந்தித்தால் தான் அந்த ஆறு கட்சிகளும் இந்தியாவை நோக்கி முன் வைத்த கோரிக்கைக்கு ஒரு பொருள் இருக்கும். இல்லையென்றால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறுவது போல அந்த ஆறு கட்சிகளும் தன் மானத்தை இழந்து இந்தியாவை சரணடைந்து விட்டன என்ற குற்றச்சாட்டு சரியாகி விடும். அந்த ஆறு கட்சிகளும் இந்தியாவுக்கு அனுப்பிய கூட்டுக் கோரிக்கை தொடர்பில் எனக்கு கேள்விகள் உண்டு. அந்த ஆவணம் வேறுவிதமாக வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கு நிலையாகும். ஆனால் தமிழ்த் தரப்பில் உள்ள ஒப்பீட்டளவில் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட ஆறு கட்சிகள் இணைந்து அவ்வாறு ஒரு கோரிக்கையை முன் வைத்திருப்பது என்பது ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை பொறுத்த வரையிலும் மூலோபாய முக்கியத்துவம் மிக்கது. ஏன் அவ்வாறு மூலோபாய முக்கியத்துவம் என்று கூற வேண்டியுள்ளது?

ஏனெனில் ஈழப் போரின் முதலாவது கட்டத்தில் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியது. பின் தள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. சிறிய கெரில்லாப் போராட்டமாக இருந்த ஈழப்போர் முழு அளவிலான ஒரு போராக வளர்ச்சி அடைவதற்கு இந்தியாவின் உதவியே பிரதான காரணமாகும்.

ஆனால் இந்திய இலங்கை உடன்படிக்கையானது இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவில் கசப்பான இரத்தம் சிந்தும் இடைவெளிகளை ஏற்படுத்தியது. இந்திய அமைதிகாக்கும் படையை நாட்டை விட்டு அகற்றும் நோக்கத்தோடு புலிகள் இயக்கத்துக்கும் அப்போதிருந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் இடையில் ஒரு தந்திரோபாய கூட்டு உருவாகியது. அதன் விளைவாக இரண்டு தரப்பும் இணைந்து இந்திய அமைதி காக்கும் படையை நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்டன. எந்த இரண்டு தரப்புக்கும் இடையிலான மோதல்களை சமாதானம் செய்வதற்காக இந்திய அமைதி காக்கும் படை இலங்கைகுள் இறங்கியதோ அந்த இரண்டு தரப்புக்களும் ஒற்றுமைப்பட்டு அமைதி காக்கும் படையை வெளியே போ என்று கேட்ட பொழுது இந்திய அமைதி காக்கும் படை பின்வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது இந்தியாவை பொறுத்த வரையிலும் அவமானகரமான ஒரு வெளியேற்றம்.

இது நடந்தது 1989 ஆம் ஆண்டு. இது நடந்து கிட்டத்தட்ட முப்பத்தி மூன்று ஆண்டுகளின் பின் எந்த ஒரு தமிழ்த் தரப்பு இந்திய அமைதிகாக்கும் படையை வெளியேறுமாறு கேட்டதோ அதே தமிழ்த் தரப்பிலிருந்து மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மொத்தம் 11 பிரதிநிதிகள் அடங்கிய மொத்தம் 6 கட்சிகளின் கூட்டு இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறது. அக் கோரிக்கையானது இந்தியாவை மறுபடியும் ஈழத் தமிழர்களுக்கு சார்பாக தலையிடுமாறு அழைக்கும் நோக்கிலானது என்று அக்கட்சிகள் தெரிவிக்கின்றன.

முதலாம் கட்ட ஈழப்போரில் தமிழ் மக்கள் தமது நம்பிக்கைகளை இந்தியாவின் மீது முதலீடு செய்தார்கள். எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறியது போல ஈழத்தமிழர்கள் தமிழகத்துக்கும் தமக்கும் இடையிலான இன,மொழி, பண்பாட்டுப் பிணைப்புக்



கூடாகவே இந்திய நடுவண் அரசை நோக்கினார்கள். ஆனால் இந்தியா ஈழத் தமிழர்களை அவ்வாறு அணுகவில்லை. மாறாக தனது பேரரசு நலன்களின் அடிப்படையில் தான் அணுகியது. அதிலிருந்து ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் விரிசல்கள் ஏற்பட்டன. இப்பொழுது கிட்டத்தட்ட முப்பத்தி நான்கு ஆண்டுகளின் பின் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பதினொருவர் இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள்.

அக் கோரிக்கையின் பெயரால் இந்தியா இலங்கைத் தீவின் அரசியலில் தமிழ் மக்களுக்குச் சார்பாக தலையிடுவதற்கு ஒரு புதிய வாய்ப்பு திறக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகளில் அதிகமானவர்கள் கூட்டாக இந்தியாவை அழைத்திருக்கிறார்கள். அவ்வாறு தமிழ் மக்களின் பெயரால் தலையிடுவதன் மூலம் இந்தியா தனது தெற்கு மூலையில் சீனாவின் பிரசன்னம் அதிகரிப்பதற்கு எதிராக தமிழ் மக்களோடு இணைந்து ஒரு புதிய வியூகத்தை வகுப்பதற்கான வாய்ப்புகளும் திறக்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஆறு கட்சிகளின் கோரிக்கைக்கு இந்தியா காட்டப்போகும் பதில்வினையானது அந்த ஆறு கட்சிகளின் எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கப் போகிறது. அதோடு இந்தியாவின் தெற்கு மூலையில் சீனாவுக்கு எதிரான புதிய வியூகங்களுக்கான புதிய வாய்ப்புகளையும் அது தீர்மானிக்கும். இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் பலவீனப்பட்டால் அது இந்தியாவின் தெற்கு மூலையைப் பலவீனப்படுத்தும் என்பதே கடந்த பன்னிரண்டு ஆண்டு கால அனுபவம் ஆகும்.

எனவே இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருவாராக இருந்தால் மேற்படி ஆறு கட்சிகளையும் சந்திப்பாரா என்பது முக்கியத்துவம் உடையது. இந்தியா தனது பிராந்தியப் நலன்களை முன்னிறுத்தித் தான் ஈழத் தமிழர்களின் விவகாரத்தை கையாண்டு வருகிறது என்று பெரும்பாலான படித்த ஈழத் தமிழர்கள் நம்புகிறார்கள். இது விடயத்தில் ஈழத்தமிழர்களின் நம்பிக்கைகளை வென்றெடுக்கும் விதத்தில் புதிய பிரகாசமான சமிக்கைகளை காட்ட வேண்டிய ஒரு பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத் தான் கையாண்டு வருகிறது. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவின் அடிப்படையிலான உலகப் பொதுவான ஒரு ராஜிய வழமை அது.

ஆனால் இவ்வாறு கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தை கையாள முடியாது போகும் பொழுது ஈழத் தமிழர்களை ஒரு கருவியாகக் கையாண்டு இந்தியா கொழும்பை பணிய வைக்கிறது என்பதும் கடந்த நான்கு தசாப்தங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

எனவே இந்தியா தங்களை ஒரு கறிவேப்பிலையாக அல்லது பலியாடாக பயன்படுத்துகிறது என்ற ஈழத்தமிழர்களின் சந்தேகத்தையும் குற்றச்சாட்டுகளையும் கவனத்தில் எடுத்து ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு.

இது தொடர்பில் இந்தியா ஒரு சிறப்புத் தூதுவரை நியமிக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டா? அல்லது திரும்பத் திரும்ப ஒற்றையாட்சிக்குட்பட்ட அரைகுறைத் தீர்வைத் தான் வலியுறுத்துமா? மேலும் யாழ்ப்பாணத்தில் இந்தியாவால் கட்டப்பட்டிருக்கும் கலாச்சார மையம், பலாலி விமான நிலையத்தின் அடுத்தகட்ட அபிவிருத்தி, காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து போன்ற விடயங்களிலும் நிச்சயமற்ற நிலைமைகள் காணப்படுகின்றன. மோடி வருவாராக இருந்தால் இத்திட்டங்கள் அவற்றின் அடுத்த கட்டத்துக்கு விரிவுபடுத்தப்படுமா?

தமிழ்ப்பகுதிகளில் உள்ள மிக உயரமான பொதுக் கட்டிடமாகவும் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் நீண்ட நாட்களுக்கு திறக்கப்படாத ஒரு கட்டிடமாகவும் காணப்படும் மேற்படி கலாச்சார மையத்தை திறப்பதில் உள்ள தடைகள் யாவும் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் உள்ள நெருக்கமின்மையைத் தான் வெளிப்படுத்துகின்றன.

அது போலவே பலாலி விமான நிலையத்தின் அடுத்தகட்ட அபிவிருத்தி யும் இதோ தொடங்குகிறது என்று பல தடவைகள் திகதி அறிவிக்கப்பட்ட போதிலும் எதுவும் நடக்கவில்லை.



**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**

கடந்த ஆண்டு மார்ச் முதலாம் திகதி தமிழக சட்டமன்ற உறுப்பினரும் பாரதிய ஜனதாவின் தமிழ்ப் பிரமுகருமான வானதி சீனிவாசன் ஒரு ட்விட்டர் செய்தியை வெளியிட்டிருந்தார். அதிலவர் காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கு இடையிலான படகுப் போக்குவரத்துக்கான வர்த்தக உடன்படிக்கை வெற்றிகரமாக எழுதப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டிருந்தார். இப்பொழுது கிட்டத்தட்ட ஓராண்டு ஆகி விட்டது. ஆனால் அந்தப் படகுப் பயணம் மறவன்புலவு சச்சிதானந்தம் மற்றும் வானதி சீனிவாசன் ஆகியோரின் கனவுகளாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்கள் யாவும் ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கனெக்றிவிற்றியைப் பலப்படுத்தும் நோக்கிலானவை. ஆனால் இத்திட்டங்கள் அவற்றின் தொடக்க நிலையிலேயே உள்ளன. அவை அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்கு போகமுடியவில்லை. இது தமிழ் மக்கள் சார்பாக இந்தியா கொழும்பின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாமல் இருப்பதை காட்டுகிறது. மேற்படி திட்டங்களை வெற்றிகரமாக அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரிவுபடுத்துவதன் மூலம் இந்தியா தனது பலத்தை நிரூபிக்குமா?

எனவே தொகுத்து கூறின் தமிழ்த் தரப்பிலிருந்து இப்பொழுது ஒரு கூட்டு கோரிக்கை அக் கோரிக்கை தொடர்பாக விமர்சனங்கள் உண்டென்ற போதிலும் இந்தியாவை நோக்கி முன் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தரப்பு அவ்வாறு கூட்டாகக் கேட்டிருக்கும் ஒரு பின்னணியில் இந்தியா தமிழ்த் தரப்பை நோக்கி எப்படிப்பட்ட சமிக்கைகளை காட்டப் போகிறது என்பது முக்கியத்துவமுடையது. அதாவது இப்பொழுது பந்து இந்தியாவின் கைகளில் தான் உள்ளது.

## இராணுவம் தமிழின அழிப்புச் செய்யவில்லை!

(5ம் பக்கத் தொடர்ச்சி) தற்கொலை படைகளை பயன்படுத்தினார்கள். தமிழ் அரசியல் தலைவர்களையும் கொன்றார்கள். தாய்மார்கள் குழந்தைகளையும் இரக்கமின்றி வெட்டிக்கொன்றார்கள்.''

2010ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடவும் எனக்கு அதிக வாக்குகளை வழங்கியதால், படைத் தரப்பினர் தம்மை துன்புறுத்தினார்கள் என்பதை வடக்கிலுள்ள மக்கள் நம்பவில்லை என்பது தெளிவாகிறது.

எது எப்படி இருப்பினும், ஒன்று அல்லது இரு உறுப்பினர்கள் செய்த குற்றங்களுக்காக ஒட்டுமொத்த படையினரும் பாதிக்கப்படக்கூடாது. 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்தஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் களுக்காக போராடி வரும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு ஆதரிக்கிறேன் என்றார்.

ஆசிரியர் குறிப்பு:- 2010 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை. மகிந்த ராஜபக்சாவிற்கு எதிராகவே தமிழ்மக்கள் உள்ளார்கள் என்பதற்காகவே சரத்பொன்சேவை ஆதரிக்கும்படி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களைக் கோரியது. கூட்டமைப்பின் வேண்டுகோளையேற்றே தமிழ்மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள்.

இதேவேளை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களது கட்சி உட்பட பல சிவில் சமூக அமைப்புக்கள் இதனை எதிர்த்தன. எதிர்வரும் காலங்களில் சரத் பொன்சேகா இதனைப் பயன்படுத்துவார் என்பதை எடுத்துக் கூறின. ஆனால் யார் சொன்னாலும் கேட்காத சம்பந்தர் செய்த காரியத்துக்கு பலனை இப்போது கேட்கக்கூடியதாக இருக்கின்றது. என்று தான் எங்கள் தலைவர்கள் உணர்வார்களோ?

# 13வது திருத்தமும் தமிழ் அரசியல் சமூகமும் ஒரு யதார்த்த அணுகுமுறை!

1

கட்டுரையாளர்:
கலாநிதி
நிர்மலா சந்திரஹாசன்



இன்றைய தமிழ் அரசியல் பரப்பில் முக்கிய பேசு பொருளாக மாறியுள்ள விவகாரம் இலங்கை அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தம் பயனுள்ளதா பயனற்றதா என்பதும் அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை அரசு முறைமை உண்மையிலேயே தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் தன்மையை கொண்டதா இல்லையேல் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அடையக்கூடிய கணிசமான அதிகார பகிர்வை தடுத்து நிறுத்தும் ஒரு பயனற்ற நிறுவனமாக இருக்கின்றதா? என்பதுமாகும்.

இந்த விவாதம் முன்னரங்கிற்கு கொண்டு வரப்பட்டதின் முக்கிய காரணம் தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட பல தமிழ் அரசியல் கட்சிகள் அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கைக்கான இந்திய தூதுவருக்கூடாக அனுப்பிய கடிதமொன்றில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவதற்கு இலங்கை அரசை இந்திய அரசு உரிய முறையில் ஊக்குவிக்க வேண்டும் என்று கோரியிருந்ததுடன் இந்த 13ஆவது திருத்தமானது 1987இல் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கொண்டு வரப்பட்டது என்பதையும் அதில் சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்த விவகாரம் 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பவர்கள் மத்தியிலிருந்து எதிர்ப்பு ஆர்பாட்டங்களை தூண்டி விடவும் காரணமாய் அமைந்து விட்டது. கோட்டாபய அரசு புதிய அரசியல் யாப்பொன்றை தயாரிப்பதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்து, அக்குழு மிக விரைவில் புதிய நகல் அரசியல் யாப்பொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருப்பதாக செய்திகள் வெளிவரும் இவ்வேளையில் இந்த வாதப்பிரதி வாதங்கள் மேலும் அதி முக்கியத்துவம் பெறுகின்றன என்று கூறலாம்.

13ஆவது பற்றிய வாதப்பிரதிவாதங்களின் சரியான நியாயங்களை தீர்மானிப்பதற்கு 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டிருக்கும் சாராம்சங்களையும் 1988 இலிருந்து வடக்கு கிழக்கு தவிர்ந்த இலங்கை முழுவதும் 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டு தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்த மாகாண அரசுகளின் செயற்பாடுகள் பற்றியும் பார்ப்பது முக்கியமாகும்.

இந்த மாகாண அரசு முறைமை வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களின் நீண்ட கால கோரிக்கையான சமஷ்டி அடிப்படையிலான அதிகார பரவலாகத்தின் விளைவாகவே ஏற்பட்டது என்பதுடன் ஆரம்பத்தில் இது வடக்கு கிழக்கு இணைந்த மாகாணத்திற்கு மாத்திரமே அமைக்கப்படும் என்று கருதப்பட்ட போதிலும் இந்த முறைமை சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அப்போது இந்த மாகாணங்களில் மாகாண அரசுக்கான கோரிக்கை எழவில்லை என்பதும் குறிப்பிடப்படவேண்டியது.

முதலாவது மாகாணசபை தேர்தல்கள் ஏப்ரல் 1988இல் வட மத்திய வடமேற்கு சப்ரகமுவ மாகாணங்களுக்கும் பின்னர் ஏனைய மாகாணங்களுக்கும் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் செப்ரெம்பர் 1988இல் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாக அலகாக இணைக்கப்பட்டு, நவம்பர் 1988இல் இணைந்த வடக்கு கிழக்கு



மாகாணங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. பின்னர் 1990இல் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது. இதன் பின்னர் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணம் மத்திய அரசினால் நேரடியாக நிர்வகிக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்தத்தால் இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடைபெறவில்லை. 2006ஆம் ஆண்டு நீதிமன்ற தீர்ப்பொன்றின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித் தனியாக பிரிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்துக்கான தேர்தலும் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி வடக்கு



மாகாணத்துக்கான தேர்தலும் நடைபெற்றது. எனவே இந்த மாகாண சபை முறைமை நீண்ட காலமாக செயற்பட்டு வந்திருப்பதை அவதானிக்கலாம். ஆனால் இந்த நீண்ட கால கட்டத்தில் மாகாணசபை பட்டியல் 1இன் 9ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட 13ஆவது திருத்தத்தின் குறித்த சில பிரிவுகள் செயல்படுத்தப்படாமல் இன்னமும் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த அநுபந்தங்கள் பின்வரும் விடயங்களைக் கையாள்வதற்கான ஏற்பாடுகளாகும்

அநுபந்தம் 1 சட்டம் ஒழுங்கு தொடர்பானது. இது பிரதானமாக தேசிய பொலிஸ் பிரிவுடன் இணைந்த ஒரு மாகாண பொலிஸ் பிரிவின் பொலிஸ் அதிகாரத்துடனும் அதன் நிறுவன கட்டமைப்புடனும் சம்பந்தப்பட்டது.

அநுபந்தம் 2 காணியும் குடியேற்ற அதிகாரமும் தொடர்பானது.

அனுபந்தம் 3 கல்வி அதிகாரம் தொடர்பானது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களோடு மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட ஏனைய எல்லா விடயங்களிலும் சட்டவாக்க அதிகாரத்தையும் நிறைவேற்று அதிகாரத்தையும் அது கொண்டிருக்கின்றது.

மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட பட்டியலில் பின்வரும் விடயங்கள் உள்ளன. அவைஹ மாகாண வீடமைப்பும் நிர்மாணமும் விவசாயமும் விவசாய சேவைகளும் கிராமிய அபிவிருத்தி, சுகாதாரம், காணி, நீர்ப்பாசனம், மாகாண எல்லைக்குள்ளான வீதிகள் பாலங்கள், மாகாணத்துக்குள்ளான போக்கு வரத்துக்கான கப்பல் சேவைகள், மாகாணத்துக்குள்ளான பொருளாதார திட்டமிடலும் அமுலாக்கலும். கல்விச்சேவையும் மேற்பார்வையும், உள்ளூர் ஆட்சி நிர்வாகம் என்பனவாகும்.

இந்த மாகாண சபைக்கான பட்டியலில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என மத்திய அரசினால் பிரகடனப்படுத்தப்படாத பழமை வாய்ந்த வரலாற்று நினைவிடங்களும் உள்ளடங்கும். அண்மையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சி தொடர்பான நடவடிக்கைக் குழுவில் தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவில்லை என்பதை மனதிற்கொண்டு இதைக் குறிப்பிடுகிறேன்.

அத்துடன் பகிரப்பட்ட அதிகாரங்கள் தொடர்பிலான ஒரு பட்டியல் குறிப்பிடப்பட்ட விடயங்களில் மாகாண சபைகளும் மத்திய அரசும் அதிகாரங்களைப் பிரயோகிக்கலாம். இதில் மாகாண மட்டத்தில் நடைபெறும் திட்ட அமுலாக்கல் தொடர்பான மூலோபாயங்களை மேற்பார்வை செய்யவும் மதிப்பீடு செய்யவும் மாகாண சபைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கல்வியும் கல்விச்சேவையும் உயர் கல்வி, விவசாயமும் விவசாய சேவைகளும், சுகாதாரம் நீர்ப்பாசனம் சுற்றுலா போன்றவை இந்தப் படியலில் உள்ள சில முக்கிய விடயங்களாகும். மாகாண சபைக்கும் மத்திய அரசிற்கும் அதிகாரமுள்ள விடயங்களில் அதிகார வரம்புகள் பற்றிய சர்ச்சைகள் உருவாகுவது எதிர்பார்க்கப்பட வேண்டிய தொன்றே. மாகாண சபை நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாகவும் பகிரப்பட்ட பொது நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாகவும் மாகாண சபைகள் சட்டங்களை ஆக்கவும் அவற்றின் மீது நிறைவேற்று அதிகாரங்களை அவை பிரயோகிக்கவும் முடியும்.

இந்த அதிகாரங்கள் பெரும்பாலும் இந்திய அரசியல் யாப்பின் 6ஆவது பிரிவின் பிரகாரம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படட அதிகாரங்களை ஒத்தவை. இந்திய மாநிலங்கள் மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்குவதில் வினைத்திறனுடன் செயற்படுவதை அவதானிக்கலாம். குறிப்பாக தமிழ் நாடு தற்போது முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையில் இந்த விடயங்களில் மிகவும் வினைத்திறனுடன் இயங்குவது அவதானிக்கப்படுகிறது.

இங்கு எமக்கு முன்னால் உள்ள முக்கியமான கேள்வி இலங்கையில் ஏன் மாகாணசபை முறைமை மக்களுக்கு சேவையாற்றுவதில் வெற்றிகரமாக செயற்பட முடியாமலுள்ளது? ஏன் பணத்தை வீண் விரயமாக்கும் ‘வெள்ளை யானை’ என வர்ணிக்கப்படுகின்றது? இவ்வாறு இருப்பதை நிவர்த்தி செய்வதற்கும், காத்திரமானதாக மக்களுக்காக செயற்பட வைப்பதற்கும் இந்த கட்டுமானத்தில் உள்ள தடைகளை நீக்கி, அத்தியாவசியமான திருத்தங்களை மேற்கொள்வதே சரியான அணுகுமுறையாகும். எதிர்பார்த்தபடி செயற்படவில்லை என்பதற்காக மாகாண சபை முறைமையை முழுமையாக நிராகரிப்பது என்பது ‘குளிப்பாட்டிய பின் குளிப்பாட்டிய நீருடன் குழந்தையையும் சேர்த்து வீசி விடுவது’ போன்றதற்கு ஒப்பானதாகும்.

மாகாண சபைகள் பற்றி நிதானமாக மதிப்பீடு செய்து பார்த்தால் அவை முறையாகவும் முழுமையாகவும் இயங்காமல் இருப்பதற்கான பெரும்பாலான தடைகள் 13ஆவது திருத்தத்துடன் 1987ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் விளைவாகவே எழுவது தெரியவரும். இந்த சட்டத்தின்படி மாகாண சபைகளுக்கான நிதி அதிகாரம் மாகாண பொது சேவைகளுக்கான அதிகாரம், மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அதிகாரம் என்பன ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளது.

(அடுத்த வாரமும் தொடரும்)

# சர்வதேச அழுத்தங்களும் அரசியல் தீர்விற்கான சாத்தியங்களும்?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஆறு கட்சிகள் இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதிய விவகாரம் சில அரசியல் சலசலப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் அக்கட்சிகள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணத்தில் முதலாவது மக்கள் சந்திப்புபொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

ஒரு வேளை இதற்கு எதிராகவும் சில கூட்டங்கள் எதிர்த் தரப்புக்களால் நடத்தப்படலாம். உண்மையில் அனைத்து தரப்புகளும் ஒன்றிணைந்து நிற்க வேண்டிய காலத்தில் தமிழ்த் தேசிய தரப்புக்கள் தேவையற்ற வகையில் பிளவுகளை ஊக்குவிக்கக் கூடாது. ஏனெனில் அரசியல் கட்சிகளின் வழியாகத்தான் மக்கள் திரட்டப்படுகின்றனர். அவ்வாறான அரசியல் கட்சிகள் தங்களுக்குள் பிளவுற்று நிற்கும் போது மக்களும் பிளவுறுகின்றனர். முடிந்த வரைக்கும் மக்களை ஒரு அரசியல் திரட்சியாக பேணிக் கொள்ளும் வகையிலேயே அரசியல் கட்சிகளும் தமிழ் சிவில் சமூகமும் செயலாற்ற வேண்டும்.

அரசியல் தீர்வு தொடர்பான சச்சரவுகளே மேற்படி அரசியல் சலசலப்புகளுக்குக் காரணமாகும். உண்மையில் இது ஒரு தேவையற்ற சச்சரவு. இதில் கட்சிகள் முரண்பட தேவையில்லை. ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆறு கட்சிகளின் கடிதத்தை ஒரு பூதாகரமான பிரச்சினையாக்கியதால் மீண்டும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் சமஷ்டியா? மாகாண சபையா? என்னும் விவாதம் ஏற்பட்டிருக்கின்றது. ஒரு காலத்தில் சமஷ்டியா தனிநாடா? என்னும் விவாதங்கள் இடம்பெற்றன. இதிலுள்ள சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் சமஷ்டி கோரிக்கையும் தமிழர்களால் வெற்றி கொள்ள முடியவில்லை. தனி நாட்டு கோரிக்கையும் வெற்றி கொள்ள முடியவில்லை. இறுதியில் இருக்கின்ற மாகாணசபையாவது பாதுகாக்க முடியுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது.

ஏனெனில் வாய்ப்பு கிடைத்தால் அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தையும் நீக்கிவிடலாம் அல்லது அதன் பல்லை மேலும் பிடுங்க வேண்டும் என்னும் எண்ணப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கின்றது. மாகாண சபைக்குப் பதிலாக மாவட்ட சபையை கொண்டு வருவது தொடர்பில் சிந்திக்கின்றது.

மாகாணசபையில் இருக்கின்ற குறைபாடுகளுக்கு அப்பால் அது ஒரு முக்கிய விடயத்தை பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது. இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாகவே முன் வைக்கப்பட்டது. அதில் சில குறைபாடுகள் இருப்பதாக கருதியதால் அதனை ஒரு தீர்வாக தமிழர் தரப்புகள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால் இந்தியாவின் வாக்குறுதிக்கு அமைவாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டது.



இந்திய இலங்கை ஒப்பந்தம் வடக்கு கிழக்கு நிலப்பகுதியை தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடமென்பது அங்கீகரித்திருக்கின்றது. அதேவேளை தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்னும் வகையிலான அரசியலை முன்னெடுப்பதற்கான ஒரு களமாகவும் இருக்கின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் தனித்துவமான அரசியலுக்கான ஒரு களமாகவும் இருக்கின்றது.

இந்த முறைமையை இல்லாமலாக்கி, இதற்குப் பதிலாக மாவட்ட சபையை கொண்டு வந்தால் மக்களை மாவட்ட ரீதியான சிந்தனைக்குள் முடக்கலாம். இதன் மூலம் காலப்போக்கில் தமிழ்த் தேசிய அரசியல் தளத்தை நீர்த்துப் போகச் செய்யலாம் என்பதே இதற்குப் பின்னாலுள்ள இரகசியத் திட்டம். முக்கியமாக மாகாண சபையை இல்லாமலாக்க வேண்டும் அல்லது மேலும் பலவீனப்படுத்த வேண்டுமென்று சிங்கள பௌத்த ஆளும் தரப்பொன்று சிந்திக்கின்றதென்றால் அவர்கள் தூர நோக்கில் சிந்திக்கின்றனர் என்பதுவே பொருளாகும். அதே தூர நோக்கில் தமிழர் தரப்புகளும் சிந்திக்க வேண்டும். சிங்கள இராஜதந்திரத்தை புரிந்து கொண்டு அதற்கு எதிர் வினையாற்றும் அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். இப்போது சிலர் முன்வைக்கும் கேள்விகளுக்கு வருவோம்.

அதாவது சர்வதேச அழுத்தங்கள் இருக்கின்றன. இவ்வாறானதொரு அழுத்தங்களுக்கு மத்தியில் தான் கோத்தபாய அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசுகின்றது. இவ்வாறானதொரு சூழலில் இந்தியாவிடம் 13ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்தலாமா? அது புத்திசாலித்தனமா? ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷா தன்னையொரு பௌத்த சிங்களத் தலைவனாக பிரகடனம் செய்திருக்கின்றார். அவ்வாறான ஒருவரது ஆலோசனையில் வரப்போகும் அரசியல் யாப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இருக்குமென்பது நம்புமாறு கூறுவது எவ்வாறான புத்திசாலித்தனம்? இப்போது சர்வதேச அழுத்தங்கள் என்னும் விடயத்திற்கு வருவோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மீது இதுவரையில் எட்டு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதில் முதலாவது பிரேரணை இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை வெற்றிகரமாக தோற்கடித்திருப்பதாக பாராட்டி கொண்டு வரப்பட்டது.



அதே பேரவையில் தான் பின்னர் இலங்கையின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி ஏழு பிரேரணைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரேரணைகள் தான் நாம் பேசிவரும் சர்வதேச அழுத்தங்களின் அடிப்படையாகும். இந்த அழுத்தங்கள் அரசியல் தீர்விற்கு எவ்வாறு வழி வகுக்கும்? 2009இல் பாராட்டி கொண்டு வரப்பட்ட தீர்மானத்திலும் அரசியல் தீர்வு பற்றி பேசப்பட்டிருக்கின்றது.

அதாவது 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டிருக்கின்றது. இது பாராட்டி கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்பதால் இதனை நாங்கள் புறந்தள்ளலாம். ஆனால் அழுத்த பிரேரணைகள் என்று கூறப்படுபவற்றின் மூலம் என்ன தீர்வு வலியுறுத்தப் பட்டிருக்கின்றது? ஆனால் 2015இல் அப்போதிருந்த அரசாங்கமும் இணையனுசரணை வழங்கி ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வே வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இறுதியாக நிறைவேற்றப்பட்ட 46:1 தீர்மானத்திலும் இந்த விடயம்தான் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் இந்த அழுத்தங்கள் மூலம் எவ்வாறு சமஷ்டி அரசியல் தீர்வை பெற முடியும்? இது வரையில் இந்தியா மட்டுமே வலியுறுத்தி வந்த 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வானது இப்போது ஐ.நா. பிரேரணைகளிலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் ஒரு விடயம் தெளிவாகின்றது. அதாவது சர்வதேச அழுத்தங்களின் வழியாக சமஷ்டித் தீர்வை அடைய முடியாது. ஏனெனில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான பொறுப்புக் கூறல் விடயம் தான் சர்வதேச அழுத்தங்களின் வழியாக சமஷ்டித் தீர்வை அடைய முடியாது. ஏனெனில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான பொறுப்புக் கூறல் விடயம் தான் சர்வதேச அழுத்தங்களின் அடிப்படையாக இருக்கின்றது. அதுவும் கூட மிகவும் பலவீனமான நிலைமையிலேயே இருக்கின்றது. எனவே இப்போது பொறுப்புக்கூறலையும் அரசியல் தீர்வையும் வேறு வேறான விடயங்களாகவே நோக்க வேண்டும்.

சர்வதேச அழுத்தங்கள் இருப்பதாக கூறப்படும் சூழலில் தான் மறுபுறத்தில் அரசாங்கம் தங்களது நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்து வருகின்றது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை தடுக்க முடியவில்லையே! அவ்வாறாயின் அரசாங்கம் தாங்கள் விரும்புவது போன்றதொரு அரசியல் யாப்பை கொண்டு வருமாக இருந்தால் அதனை எவ்வாறு தமிழர்களால் தடுக்க முடியும்.?

தமிழர்களால் எதையுமே தடுக்க முடியாதவொரு சூழலில் இருப்பதையும் இழந்து போனால் தமிழர்களின் எதிர்காலம் என்ன? இருப்பதும் பறிபோகும் நிலைமை ஏற்பட்டாலும் தமிழர்களால் அதனையும் தடுக்க முடியாது. இவ்வாறானதொரு நிலையில் தான் ஒரு பலமான ஆதரவை தமிழர்கள் தங்கள் வசப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைய உலக அரசியலை பொறுத்த வரையில் இந்தியாவை மீறி, அவ்வாறானதொரு பலமான ஆதரவை தமிழர்களால் ஒரு போதும் பெற முடியாது. இந்தியா இல்லாமல் தமிழர்களால் உலகத்துடன் ஊடாட முடியாது. இந்தியா இல்லாத உலக ஊடாட்டம் எதுவும் தமிழர்களுக்கு பலனளிக்கப் போவதில்லை.


1987இற்குப் பின்னர் இதுவரையில் மேற் கொள்ளப்பட்ட எந்தவொரு அரசியல் தீர்வு முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. இதுவரையில் வெற்றியளிக்காத விடயங்களை இனி மேல் எவ்வாறு வெற்றி கொள்ள முடியும்? இதனை புரிந்து கொண்டால் ஏன் இன்றைய சூழலில் 13ஆவது திருத்தச் சட்டத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டுமென்னும் உண்மையை இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022

# உக்ரைனின் கிழக்கே டொன்பாஸில் தனி நாடுகளுக்கு புடின் அங்கீகாரம்! பூகோள அரசியல் போட்டியால் பூமிப்பந்தில் புதியதேசங்கள்!

உக்ரைன் நாட்டின் கிழக்குப் பகுதியில் டொன்பாஸ் பிராந்தியத்தில் கிளர்ச்சியாளர்களது கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு நிலப்பிரதேசங்களைத் தனி நாடுகளாக அங்கீகரித்திருக்கிறது ரஷ்யா.

ஜனாதிபதி விளாடிமிர் புடின்நாட்டுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் தனிநாட்டு அங்கீகாரத்துக்கான பிரகடனத்தில் ஒப்பமிடவுள்ளார் என்பதை அறிவித்திருக்கிறார்.




ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சிப் படைகளால் தன்னிச்சையாகவே குடியரசுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த டொனெட்ஸ்க் (Donetsk) மற்றும் லுஹான்ஸ்க் (Luhansk) ஆகிய இரண்டு பகுதிகளையுமே புடின் சுதந்திர நாடுகளாக அங்கீகரித்திருக்கிறார். இதன் மூலம் மேற்குக்கும் கிழக்குக்கும் இடையேயான பூகோள அரசியல் போட்டி கிழக்கு ஐரோப்பாவில் இரண்டு புதிய தேசங்கள் தோன்றுவதற்கான வழிகளைத் திறந்து விட்டிருக்கின்றது.

ஜனாதிபதி புடின் தனது தொலைக்காட்சி உரையில் உக்ரைன் அதிகாரத்தை 'அமெரிக்காவின் பொம்மை ஆட்சி' என்று வர்ணித்தார். ஒரு தேசத்துக்கான எந்தப்பண்புகளையுமோ அடிப்படைகளையுமோ கொண்டிருக்காத அந்த நாடு நேட்டோ வின் யுத்த மேடையாக மாறியிருக்கிறது என்றும் குற்றம் சுமத்தினார். நவீன உக்ரைன் கம்யூனிஸ ரஷயாவினால் உருவாக்கப்பட்ட தேசம். அதன் ரஷ்யத் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துவிட்டு அங்கு ஊழல் மிக்க பயங்கரவாத ஆட்சி கட்டியெழுப்பப்பட்டுளளது என்றும் அவர் சாடினார்.

புடினின் பிரகடனத்தை ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கண்டித்து வருகின்றனர். எவருடைய நகர்வுகளும் உக்ரைன் நாட்டின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் மதிப்பவையாக இருக்க வேண்டும் என்று ஐ. நா. சபை கூறியிருக்கிறது.

டொன்பாஸில் இரண்டு குடியரசுகளையும் அங்கீகரித்ததன் மூலம் அவ்விரு நாடுகளையும் பாதுகாப்பதற்காக அவற்றின் அழைப்பின் பேரில் ரஷ்யப் படைகள் அங்கு அனுப்பப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் அவ்வாறு படைகள் தனது எல்லைகளுக்குள் நுழைவதை உக்ரைன் அனுமதிக்காது. இதன் மூலம் அப் பிராந்தியம்



நிரந்தரமான போர் பதற்றத்தை நோக்கி நகர்கிறது.

சர்வதேச சட்டங்களையும் மின்ஸ்க் உடன்படிக்கையையும் மீறி மொஸ்கோ உக்ரைனின் ஒரு பகுதிக்குத் தனி நாடுகளுக்கான அங்கீகாரத்தை அளித்திருப்பதால் அதன் மீது தடைகளை அறிவிப்பதற்குத் தயாராகி வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஆனால் மேற்குலகின் தடைகள் எதயையும் மொஸ்கோ கணக்கில் எடுப்பதாக இல்லை. டொன்பாஸ் (Donbas) என்பது ரஷ்யாவோடு எல்லையைக் கொண்டுள்ள உக்ரைனின் கிழக்குப் பிராந்தியம்.

2014 இல் கிரீமியாக் குடாவை ரஷ்யா ஆக்கிரமித்த சமயத்தில் உக்ரைன் படைகளுக்கும் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே அங்கு சண்டைகள் மூண்டன. அச்சமயம் டொன்பாஸ் பிராந்தியத்தின் டொனெட்ஸ்க் (Donetsk) மற்றும் லுஹான்ஸ்க் (Luhansk) ஆகிய இரண்டு பகுதிகள் கிளர்ச்சிப் படைகளது வசமாகின. அவற்றை அவர்கள் ரஷ்யாவின் ஆதரவோடு தன்னாட்சிக் குடியரசுகளாக நிர்வகித்து வருகின்றனர். டொன்பாஸ் பிராந்திய நெருக்கடியைத் தணிப்பதற் காக உக்ரைன் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மின்ஸ்க் உடன்படிக்கையின் கீழ் பேணப்பட்டு வந்த யுத்த நிறுத்தம் சமீப நாட்களாகவே மீறல்களைச் சந்தித்துள்ளது. இரு தரப்பினரது கட்டுப்பாட்டு எல்லைப் பகுதிகளில் மோட்டார் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அச்சமயத்தில் ரஷ்யா வெளியிட்டிருக்கின்ற தனிநாட்டு அங்கீகாரம் மின்ஸ்க் உடன்படிக்கையை அடியோடு தூக்கிக் கடாசுவதாக அமைந்துள்ளது

# ஜேர்மன், பிரிட்டனைத் தொடர்ந்து ரஷ்யா மீது அமெரிக்காவும் பொருளாதாரத்தடை விதித்தது



மேற்கத்திய நிதியுதவியிலிருந்து ரஷ்யாவை திறம்பட துண்டிக்கும் பொருளாதாரத் தடைகளை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 22 பெப் 2022 செவ்வாயன்று அறிவித்தார். உக்ரேனுக்கு எதிரான ரஷ்யாவின் நடவடிக்கைகள் குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பைடன்,

நாங்கள் (அமெரிக்கா) 2 ரஷ்ய நிதி நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கிறோம். ரஷ்யா இனி மேற்கத்திய நாடுகளில் இருந்து பணம் திரட்டவோ அல்லது மேற்கத்திய சந்தைகளில் வர்த்தகம் செய்யவோ முடியாது என்றார்.

ஜேர்மனியும் பிரிட்டனும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை முன்னெடுத்ததைத் தொடர்ந்து அமெரிக்காவின் தடைகள் குறித்த அறிவிப்பு வந்துள்ளது.

ஜேர்மன் ரஷ்யாவுக்கான 2 இயற்கை எரிவாயு குழாய்க்கான சான்றிதழ் செயல்முறையை இடைநிறுத்தியது. இது ரஷ்ய எரிவாயுவை ஜேர்மனி வழியாக ஐரோப்பாவுடன் நேரடியாக இணைக்கிறது.

அதேநேரம் ஐந்து ரஷ்ய வங்கிகள் மற்றும் மூன்று தொழிலதிபர்களுக்கு எதிராக இங்கிலாந்து கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது. இது தவிர ஐரோப்பிய ஒன்றியம் பல ரஷ்ய அதிகாரிகள் மற்றும் ரஷ்ய ஆயுதப் படைகளுக்கு நிதியளிக்கும் வங்கிகள் மீதும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. ரஷ்ய ஜனாதிபதி திங்களன்று கிழக்கு உக்ரேனின் இரண்டு பிரிவினைவாத பகுதிகளான டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் ஆகியவற்றின் சுதந்திரத்தை அங்கீகரித்தார்.

ரஷ்யா ஆதரவு பெற்ற உக்ரேனின் பிரிவினைவாதத் தலைவர்களுடன் புடின் நட்பு மற்றும் உதவி ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதுடன் குறித்த பகுதிகளுக்கு படைகளை அனுப்ப ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவப் பலவீனம்?

(5ம் பக்கத் தொடர்ச்சி) கொள்ளாமையின் காரணமாகவே, கூட்டமைப்பில் எவரும் எதையும் செய்யலாம் என்னும் நிலைமை காணப்படுகின்றது. கூட்டமைப்பின் அனைத்து தவறுகளுக்கும் அனைத்து பின்னடைவுகளுக்கும் அனைத்து குழப்பங்களுக்கும் -அனைத்து உள்முரண்பாடுகளுக்கும், ஒருவர்மீது குற்றம்சாட்ட முடியுமென்றால் அது நிச்சயம் சம்பந்தனாக மட்டுமே இருக்கமுடியும்.

# யாரும் சுத்தம் இல்லை! 40 ஆண்டுகளுக்கு விடிவு இல்லை!

(20ம் பக்கத் தொடர்ச்ச்) எல்லோருக்குமே தெரிந்த சங்கதி. நான்கு ஆண்டுகாலமாக நடந்த காலம் கடத்தல், இழுத்தடிப்பு என்பதற்கு அப்பால் எதுவுமே நிகழவில்லை. அதைப்போன்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்கவே மாற்றத்தின் நாயகர்களாக உருவாகி விடலாம் என்றே சம்பிக்கவும் சஜித்தும் முயற்சிக்கிறார்கள்.

இதெல்லாம் எதைத் தரப்போகின்றன? இவ்வாறே தமிழ் அரசியலும் நாறிப்போய்க் கிடக்கிறது. 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் கூட ஒன்றிணைய முடியாமல் தமிழ்க் கட்சிகள் உள்ளன. இந்தச் சீரில் 13க்கு மேலே சென்று சமஸ்டி, தனிநாடு என்ற கனவுகள், கூவுதல்கள் வேறு. இதையிட்டுச் சிரிப்பதா? அழுவதா?

ஈழநாடு மின்னிதழ் eelanadu.ca

# சம நிலைப்படாத உறவுகள்

இந்தியாவுடனான உறவுகளை அவசர அவசரமாக புதுப்பித்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லிக்குப் பயணம் மேற் கொண்டு திரும்பியிருக்கிறார். அடுத்து நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ அங்கு செல்வதற்குத் திட்டமிட்டுள்ளார்.

அடுத்த மாத நடுப்பகுதியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் அடுத்த மாத பிற்பகுதியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் கொழும்புக்கான பயணங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர். இரண்டு பக்கங்களிலும் அடுத்தடுத்து இராஜதந்திரப் பயணங்கள் பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் இலங்கைக்கு ஏற்கனவே 2.4 பில்லியன் டொலர்கள் கடனுதவிகளை வழங்க இந்தியா இணங்கியிருக்கிறது. அதில் ஒரு பகுதி ஏற்கனவே வழங்கப்பட்டுக் கொண்டிருக்க எஞ்சிய பகுதியைப் பெற்றுக் கொள்வதற்கான உடன்பாட்டில் பஷில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தின் போது கையெழுத்திடப்படவுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை அரசாங்கம் சீனாவின் பக்கம் அதிகம் சாய்ந்திருந்த நிலையில் இந்தியாவுடன் சற்று எட்டத்திலேயே நின்றது.

தற்போது இலங்கை அரசாங்கம் புதுடில்லியுடன் நெருங்கிச் சென்றிருக்கிறது. அதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன.

ஒன்று, பொருளாதார ரீதியாக அரசாங்கத்துக்கு உள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவி தவிர்க்க முடியாததாக மாறி விட்டது.

வேறெந்த நாட்டில் இருந்தும் கடனுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாமல் போனதால் தவிர்க்க முடியாமல் புது டில்லியிடம் சரணடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. அது இலங்கை அரசாங்கத்துக்கு தற்காலிக தீர்வை வழங்கியும் உள்ளது.

அடுத்ததாக வரும் 28ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்படவுள்ளது. அங்கு ஏற்படப் போகின்ற நெருக்கடிகளை சமாளிப்பதற்கு இந்தியாவின் ஆதரவைக் கோரியிருக்கிறது இலங்கை.

புதுடில்லியில் நடத்திய பேச்சுக்களின் போது ஜெனிவா கூட்டத்தொடர் சம்பந்தமாகவும் பேச்சு நடத்தியதாக கூறியிருக்கிறார் அமைச்சர் பீரிஸ். இந்தியாவுக்கு எல்லாம் தெரியும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியா ஜெனிவாவில் தங்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும் என்று அவர் சூசகமாக கூறியிருக்கிறார். இப்போதைய இரண்டு நெருக்கடிகளில் இருந்தும் தீர்வைப் பெறுவதற்கு இந்தியாவை நாடுவது தவிர்க்க முடியாத தேவையாக மாறியிருக்கிறது.

இந்த நிலையில் இலங்கை விவகாரத்தை இந்தியா எவ்வாறு கையாளப் போகிறது என்ற கேள்விக்கு தெளிவான பதில் இன்னமும் கிடைக்கவில்லை. இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளைத் தீர்த்து சீனாவிடம் இருந்து சற்று விலகி நிற்க வைத்திருக்கும் வகையில் இந்தியா செயற்படப் போகிறதா?

அல்லது 1980 களில் இலங்கை விவகாரத்தில் இந்தியா வகித்த பாத்திரத்தை மீண்டும் எடுத்துக் கொள்ளப் போகிறதா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இலங்கைக்கு நெருக்கடிகள் ஏற்பட்ட தருணங்களில் இந்தியாவிடம் உதவிகள் கோரப் பட்டிருக்கின்றன. அவ்வாறு இந்தியாவிடம் உதவிகளைப் பெற்றுக் கொண்டதுடன் கொழும்பு அதனை வெட்டி விடுகின்ற வேலையையே இதுவரை பார்த்திருக்கிறது. குறிப்பாக போரை நிறுத்துமாறு சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்திருந்த போது இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு கிடைத்தது.

இந்தியா போரை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்கவில்லை. அதனை (புலிகளின் கதையை) முடித்து வைக்குமாறே கூறியது. அந்த ஆதரவின் மூலம் தான் இறுதிப் போரில் இலங்கை வெற்றியை பெற்றது,



அந்த வெற்றிக்குப் பின்னர் இந்தியாவின் எதிர்பார்ப்புகளையோ கோரிக்கைகளையோ இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

போருக்கு முன்னரும் பின்னரும் தமிழர் பிரச்சினைக்கு கூடுதல் அதிகாரப்பகிர்வுடன் (13 பிளஸ்) கூடிய தீர்வை வழங்குவதாக வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. அந்த வாக்குறுதிகள் இதுவரை இலங்கை அரசினால் நிறைவேற்றப்படவில்லை.

அது போல பல சந்தர்ப்பங்களில் நெருக்கடிகளை சமாளிப்பதற்கு மட்டும் புது டில்லியைப் பயன்படுத்தி விட்டு கறிவேப் பிலையாக தூக்கியெறியும் வழக்கத்தை இலங்கை அரசாங்கம் கொண்டிருந்தது. இவ்வாறான நிலையில் தற்போதைய பொருளாதார மற்றும் சர்வதேச நெருக்கடிகளை சமாளிப்பதற்கு மாத்திரம் இந்தியாவைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறதா இலங்கை என்ற கேள்வி இருக்கிறது.

இலங்கை இவ்வாறான நோக்கத்தைக் கொண்டிருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கு அப்பால் இந்தியா இந்த விடயத்தை எவ்வாறு அணுகப் போகிறது என்பதே முக்கி யமானது. இதுவரை காலமும் இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

குறிப்பாக தமிழர்களுக்கான அதிகாரப்பகிர்வு குறித்து எந்த நடவடிக்கையுமே எடுக் கப்படவில்லை. புதுடில்லியில் அமைச்சர் பீரிஸ் நடத்திய சந்திப்புகளின் போதும் இதுகுறித்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியா அதனை உறுதிப்படுத்தியிருப்பினும் இலங்கை அரசாங்கம் அதனை மறைத்துள்ளது. வெறுமனே பேச்சுக்களில் இந்த விடயங்களை வலியுறுத்துவதற்கு அப்பால் இந்தியா இந்த விடயங்களில் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இலங்கையில் இந்தியா தனது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதும் தமிழர்களின் நலன்களை உறுதி செய்து கொள்வதும் பிரிக்கப்பட முடியாத சமாந்தரமான கோடுகளைப் போன்றது. ஒன்று அழிக்கப்பட்டால் இன்னொன்று அர்த்தமிழக்கும். அண்மையில் பிபிசி தமிழுக்கு இந்திய ஊடகவியலாளர் பகவான்சிங் ஒரு செவ்வியை அளித்திருந்தார்.

அதில் அவர் இலங்கைத் தமிழர்களின் நலன்களை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அது இந்தியாவின் நலன் களை உறுதிப்படுத்தும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அதாவது தமிழர்கள் தான் இந்தியாவின் நிரந்தரமான பாதுகாப்பு என்று அவர் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அனைத்து சமூகத்தினரையும் அரவணைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாலும் தமிழர்களைக் கொண்டே இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்று அவர் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

ஆனால் இந்தியா அந்த விடயத்தில் தொடர்ந்து தவறிழைத்து வருகிறது. இலங்கை அரசாங்கத்தை சமாளிப்பதற்கு மட்டுமே அது முயற்சித்து வருகிறது. இலங்கைக்கான தூதுவராக தமிழர் ஒருவர் கூட நியமிக்கப்பட்டதில்லை என்று ஊடகவியலாளர் பகவான் சிங் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதனை எழுதப்படாத ஒரு உடன்பாடாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அது இந்த பிரச்சினையை உணர்வுபூர்வமாக அணுக முடியாமைக்கான ஒரு காரணம் என்றும் பகவான்சிங் தெரிவித்திருக்கிறார்.

தமிழர் விவகாரத்தை இந்தியா உணர்வுபூர்வமாக அணுகப் போகிறதா பாதுகாப்பு கரிசனையுடன் அணுகப் போகிறதா, தார்மீக அடிப்படையில் தலையிடப் போகிறதா என்பதைப் பொறுத்தே அதன் பாதுகாப்பும் நலன்களும் உறுதி செய்யப்படும். இலங்கை அரசாங்கம் எப்போதுமே இந்தியாவைப் பயன்படுத்திக் கொண்டு விட்டு தூர எறிந்து விடும் வகையில் தான் செயற்பட்டு வந்திருக்கிறது.


கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்




அந்த நிலையை மாற்றி இந்தியாவின் பாதுகாப்பை நிரந்தரமாக உறுதி செய்யக்கூடிய வகையில் நடவடிக்கை எடுப்பதாயின் இந்தியாவுக்கு உள்ள தெரிவு தமிழர்களை பலப்படுத்துவது தான் தமிழர்களைப் பலப்படுத்துவதென்பது ஆயுத ரீதியாக அல்ல.

அரசியல் ரீதியாக அதிகாரம் பெற்றவர்களாக அவர்களை மாற்றுவது மட்டும் தான் இந்தியாவின் நலன்களை உறுதி செய்யும்.

அதனை புதுடில்லி புரிந்து கொள்ளாத வரையில் அதற்கேற்ற வகையில் புது டில்லியின் இராஜதந்திரிகள் காய்களை நகர்த்தாத வரையில் கொழும்புடனான புது டில்லியில் உறவுகள் ஏற்ற, இறக்கங்களைக் கொண்டதாக ஏணியும் பாம்பும் விளையாட்டுப் போலத் தான் அமைந்திருக்கும்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# யாரும் சுத்தம் இல்லை! 40 ஆண்டுகளுக்கு விடிவு இல்லை!

(21ம் பக்கத் தொடர்ச்சி) வடக்குக் கடலில் சீனாவும் இந்தியாவும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதிலும் ஆழக்கடலில் இந்தியாவும் கரையோரக் கடலில் சீனாவும் பங்குகளைப் பெற்றுக் கொள்வதற்குப் போட்டியிடுகின்றன என்பது கவனிக்கத்தக்கது. நாம் கடலில் மீன் கூடப் பிடிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே இதை உணர்ந்து கொண்டு இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டு எதிர்கால இலங்கையைக் கட்டமைப்பது எப்படி? அதற்கான அடிப்படைகள் என்ன? அதனை முன்னெடுப்பது எப்படி? மாற்ற வேண்டிய விடயங்கள் எவை? அதற்கு மக்களையும் பிற சக்திகளையும் எப்படித் தயார்ப்படுத்துவது? இதற்கான தலைமை எது? அந்தத் தலைமையின் குணாம்சமும் கடமைகளும் (பொறுப்புகளும்) எப்படியிருக்க வேண்டும்? என்றெல்லாம் சிந்திக்கக் கூடிய நிலையில் எந்தத் தரப்பும் இல்லை.

இன்று நாட்டிலே நான்கு பெரிய தரப்புகள் ஆட்சி அதிகாரத்தை அமைக்கக்கூடிய நிலையில் உள்ளன. ஒன்று ஐ.தே.க. மற்றது சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி. மூன்றாவது, சு.க. நான்காவது பொதுஜன பெரமுன. இந்த நான்கிலும் வழமையான சிந்தனைக்கு அப்பால் புதிய மாற்றுக்கள் மாற்று முறைமைகள் உண்டா?

ஐதேகவின் மறு பதிப்பே ஐக்கிய மக்கள் சக்தி. சு.கவின் மறுபதிப்பே அல்லது பிந்திய வடிவமே பொதுஜன பெரமுன. பிந்தியவை ஐ.தே.கவையும் சு.கவையும் கடக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை. அதிகாரப் போட்டியின் விளைவாக புதிய தோற்றத்தில் உள்ளனவே தவிர புத்தாக்கமாக இல்லை என்பது நிரூபணம்.

இலங்கையின் தேசிய நெருக்கடிகளான இனப்பிரச்சினை பொருளாதார நெருக்கடி அந்நிய ஆதிக்கத்துக்கு இடமளியாதிருத்தல் என்பவற்றில் இவை ஆற்றற் குறைவையே கொண்டுள்ளன.

ஐந்தாவது தரப்பான ஜே.வி.பி இன்னும் ஒரு தேசிய சக்தியாகப் பரிணமிக்கவில்லை. அரை நூற்றாண்டு அரசியற் பாரம்பரிமுடைய அதன் வரலாறு இன்னும் மங்கலாகத்தான் உள்ளது.

இதே நிலை தான் தமிழ்த்தரப்பிடத்திலும் காணப்படுகிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குப் பதிலாக விக்கினேஸ்வரன். விக்கினேஸ்வரனுக்குப் பதிலாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.... என இப்படியே ஒன்றின் மறுபதிப்பாக மற்றது என்ற வகையில் ஒவ்வொன்றும் உள்ளன.

இதைக் கடந்து சிந்திக்கக் கூடிய நிலையில் எந்தக் கட்சியும் இல்லை. ஆகவே தமிழ்ப்பரப்பிலும் மாற்றங்கள் முன்னேற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகளில்லை.

இதைப் போலவே இன்றுள்ள எந்தத் தலைவர்களும் நாட்டின் எந்த நெருக்கடிக்கும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணக் கூடிய நிலையில் இல்லை. ஐம்பது ஆண்டுக்கும் அதிமான அரசியல் வாழ்வையும் அதிகாரத்தில் 40 ஆண்டுகளுக்கும் குறையாத பொறுப்பைக்கொண்டவர்கள் ரணிலும் மகிந்த ராஜபக்ஸவும் மைத்திரிபால சிறிசேனவும். இதைப் போலவே சம்மந்தனும் மாவை சேனாதிராஜாவும்.

இதற்கு அடுத்தாக வரக் கூடியவர்கள் என்று எதிர் பார்க்கக் கூடியவர்களும் போதாமைகளோடு தான் உள்ளனர். சஜித், சம்பிக்க ரணவக்க, நாமல் ராஜபக்ஸ எனச் சிங்களத் தரப்பிலும் சுமந்திரன், சாணக்கியன், கஜேந்திரகுமார் எனத் தமிழ்த் தரப்பிலும் உள்ளவர்களின் மனப்பாங்கையும் ஆற்றலையும் நன்கறிறோம். இவர்கள் புதிதளிக்கும் திறனுடையோரில்லை. இப்போதிருக்கும் அரசியலின் சிந்தனையின் தொடர்ச்சியாக இருக்கிறார்களே தவிர புதிய போக்கொன்றை உருவாக்கக் கூடியவர்களாக இல்லை. பழைய பழகிய வழித்தடத்தில் ஓட விரும்பும் குதிரைகளே!

விலக்காக இருந்திருக்க வேண்டிய ஜே.வி.பி தனக்குள் உட் சுருண்டு கொண்டிருக்கிறது. அது விரிந்து ஒரு தேசிய சக்தியாக மாறியிருக்க வேண்டும். அதற்கான பக்குவத்தையும் ஆற்றலையும் அது இழந்து விட்டது. அனுரகுமார புதிய உள்ளடக்கமொன்றுக்குச் செல்ல வேண்டும். அவர் நேர்மையான தலைவராக இருக்கிறார் என்பது உண்மை. ஆனால் தன்னையும் தன்னுடைய கட்சியையும் விரித்து இலங்கைக்கான சக்தியாக மாற்ற வேண்டும். மாறிக் கொள்ள வேண்டும்.

ஆனால் இதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கை வரவர பிற சக்திகளின் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறது என்ற எளிய உண்மையைக் கூட ஆபத்தான யதார்த்தத்தைக் கூட புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் எவையும் இல்லை என்பதே உண்மையாகும். இன்று வெளிப்படையாக இந்தியாவும் சீனாவும் ஆக்கிரமிப்பதற்கான பொறிகளை முன்னிறுத்திச் செயற்படுகின்றன. பிற வல்லாதிக்கச் சக்திகளும் தங்கள் கரங்களை இலங்கையில் வலுப்படுத்த முயற்சிக்கின்றன. இது ஒரு கூட்டு நெருக்கடியாக உருவாகியுள்ளது. இதை எப்படித் தடுப்பது என்பதில் திறனுள்ள எந்தப் பொறிமுறையும் எவரிடத்திலும் இல்லை. ஆனால் என்ன தான் அழிவு வந்தாலும் நமக்குள்ளே ஒரு போதும் இணங்கிக் கொள்ள மாட்டோம். பதிலாக உலகச் சக்திகளிடம் அடிமைப்பட்டுக் கொள்வோம் என்பதே இலங்கையர்களின் கொள்கை.

இதையே வெளிச்சக்திகள் தமக்கு வாய்ப்பாக்கிக் கொள்கின்றன. முக்கியமாக பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இலங்கை ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்ற புரிதலே பல தரப்புகளிடமும் இல்லை. அதிலும் முதல்நிலை அரசியற் சக்திகளாக உள்ள எந்தத் தரப்பிடத்திலும் இந்தப் புரிதல் இல்லை. இருப்பதெல்லாம் இனவாதம் மட்டுமே. அதிலிருந்தே ஒவ்வொரு தரப்பும் தம்மைக் கட்டமைத்துள்ளன. அதிலிருந்தே தமக்கான தருக்க நியாயங்களை உருவாக்கிக் கொள்கின்றன.

இப்படியான சூழலில் எப்படி மாற்றங்கள், நல் விளைவுகள் உருவாகும்? இப்பொழுது சம்பிக்க ரணவக்க புதியதொரு சக்தியாக முன்னெழுவதற்கு முயற்சிக்கிறார். மாற்றத்தின் புதிய நாயகன் என்று ஒரு தரப்பு சம்பிக்கவைக் கட்டமைக்க முயற்சிக்கிறது. இதைப் போலவே சஜித் பிரேமதாசவும் நாடு முழுவதிலும் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வருகிறார். அவருக்குப் பின்னாலும் ஒரு கூட்டம் திரள்கிறது.

இருவரிடத்திலும் ஒரு புதிய சேதியைக் காண முடியவில்லை. ஆனால் நாட்டில் உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடியையும் அரச எதிர்ப்புணர்வையும் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள விளைகிறார்கள். இதற்கு வாய்ப்பாக தற்போதைய ஆட்சியைக் கவிழ்க்க விரும்பும் பிற சக்திகளும் பின் தூண்டல்களைச் செய்கின்றன. இதொன்றும் புதியதல்ல. கடந்த காலத்திலும் இதைப் போல நெருக்கடிகளின்போது அதிகாரத்திலிருக்கும் அரசுக்கு எதிராக மாற்றத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்ற குரலோடு பல சக்திகள் எழுந்து வந்திருக்கின்றன.

அண்மைய உதாரணம், கடந்த நல்லாட்சிக்கான அரசாங்கமாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வு, புதிய அரசியலமைப்பு, நல்லிணைக்கம், பகை மறப்பு, பொறுப்புக் கூறல், புதிய அபிவிருத்திப் பாதை என்று பல அழகிய பிரகடனங்களோடு அதிகாரத்துக்கு வந்தது. இதற்குச் சர்வதேச ஆதரவு என்ற வகையில் இந்தியா மேற்குலக ஆதரவும் இருந்தது. ஆனால் இறுதியில் என்ன நடந்தது? என்பது (18ம் பக்கம் பார்க்க)

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

டொமினிக்கன் சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், இரண்டாவது கிழமைகளிலும்,
வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும்
2022ம் ஆண்டு தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி,
புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும்

7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது

| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,250 | REGULAR C$1,500 | REGULAR C$1,750 | REGULAR C$2,000 | REGULAR C$2,250 |
| 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$ 1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$ 1,750.00 | 25% OFF C$ 2,000.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது: விமான சீட்டு, தங்குமிட வசதி, விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை, காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு, மது பானம், குளிர்பானம், சுடுபானம்

3 மாதத்திற்கு முன்பு முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

416 644 7273 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

# யாரும் சுத்தம் இல்லை! 40 ஆண்டுகளுக்கு விடிவு இல்லை







30 ஆண்டுகளுக்குள் இலங்கையில் மகிழ்ச்சிக்குரிய எந்தப் பெரிய மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. தமிழரின் அரசியலில் 40 ஆண்டுகளுக்குள் எந்த நம்பிக்கையளிக்கக் கூடிய முன்னேற்றங்களும் நிகழ்வதற்கு வாய்ப்பில்லை.

இதொன்றும் ஆருடமல்ல. அவதானத்தின் பாற்பட்ட கணிப்பு. அனுப அறிவின் வெளிப்பாடு. இதை மறுத்துரைப்போர் தங்களுடைய தருக்க நியாயங்களை முன்வைக்க வேண்டும்.

நம்முடைய அவதானத்தின் வரைபடம் இங்கே முன் வைக்கப்படுகிறது.

தற்போதிருக்கும் அரசியற் கட்சிகளும் சரி அரசியற் தலைவர்களும் சரி இலங்கையில் நல்ல முன்னேற்றகரமான மாற்றங்களை உருவாக்கக் கூடிய அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. அதற்கான வினைத்திறனும் சிந்தனையும் இந்தத் தரப்புகளிடம் இல்லை.

இன முரண்பாட்டுக்கான தீர்வு, பொருளாதார நெருக்கடி ஜனநாயக மேம்பாடு நாட்டின் இறைமை என்பவற்றில் நிலை பேறுடைய மாற்றத்துக்கான அரசியல் அதை முன்னெடுக்கக் கூடிய துணிச்சல் அதற்கான அர்ப்பணிப்பு, பிறரையும் பிறவற்றையும் அரவணைத்துச் செல்லக் கூடிய திறன், அதற்கான சிந்தனை, இணைந்து செயற்படக்கூடிய மன விரிவு ஜனநாயகத்தின் மீதான பிடிமானம் என எவையுமே எந்தத் தரப்பிடமும் இல்லை. (அப்படி எவற்றிடமாவது அல்லது எவரிடமாவது இருந்தால் அதை யாரும் குறிப்பிட வேண்டும்).

குறைந்த பட்சம் கடந்த காலத்தைப் பற்றிய பரிசீலனையையோ அதிலிருந்து படிப்பினைகளையோ நிகழ்காலத்தைப் பற்றிய மதிப்பீட்டையோ கூட இந்தத் தரப்புகள் செய்யத் தயாரில்லை. இன்று ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடி நிலைமையைக் கூடப் புரிந்து கொள்ள முடியாமல் அதிலே ஆர்வமின்றியே உள்ளன.

பதிலாக வழமையான பசப்பு வார்த்தைகளை ஏமாற்றுக்களை அள்ளி இறைப்பதிலேயே கவனம் கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலையில் எப்படி நாட்டில் மாற்றம் நிகழும்?

## 2

நாடு இன்று மிகமிக நெருக்கடியான அரசியற் பொறிக்குள்ளும் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் சிக்குண்டுள்ளது. இதற்குத் தனியே தற்போது அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தை மட்டும் குற்றம் சாட்டித் தப்பிவிட முடியாது. தொடர்ச்சியாக அதிகாரத்தில் இருந்த அரசாங்கங்கள் ஆட்சித் தரப்புகள் ஒவ்வொன்றும் விட்ட குறைபாடுகளும் செய்த தவறுகளுமே இன்று மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளன. தற்போதைய அரசு இதில் உச்சத்தில் உள்ளது. ஆகவே இவற்றின் தவறான அரசியல் கையாள்கையினால் தான் இன்று பொருளாதார நெருடிகளின் மத்தியில் மீளவும் அந்நிய சக்திகளின் பிடிக்குள் நாடு சிக்க வேண்டி வந்துள்ளது. இதுவே இந்தியா, சீனா மற்றும் மேற்குலகு போன்ற வெளிச்சக்திகளின் கீழ் நாட்டை நேரடியாகக் கொண்டு போய் விட்டுள்ளது.

1948க்கு முன்பு ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகளாக வெளிச்சக்திகள் இலங்கையைத் தமது அதிகாரத்தின் கீழ் நேரடியாக வைத்திருந்தன. அப்பொழுது நமது மக்கள் அந்த அந்நிய சக்திகளுக்காக உழைத்துக் களைத்தனர். இப்பொழுது நாமே வெளியிலுள்ள ஆதிக்கத் தரப்புகளின் கால்களில் நாட்டைக் கொண்டுபோய் கையளித்திருக்கிறோம். இந்தப் பேரவலத்தையும் மூடத்தனத்தையும் என்னவென்று சொல்வது?

இதை கவிஞர் திருமாவளவன் அருமையாகச் சொல்லியிருக்கிறார் —

''முந்நூறு ஆண்டுகளின் முன்னே

எங்கள் நிலத்தில் அவர்களுக்காய் உழுதோம்

முன்னூறு ஆண்டுகளின் பின்னே

நாங்கள் உழுகிறோம் அவர்கள் நிலத்தில் அவர்களுக்காய்''

இது புலம் பெயர்ந்தும் அடிமை நிலையை வெளிப்படுத்தும் துயரவரிகள். ஆனால் இங்கே நாட்டிலும் இது தான் நிலைமை.

''முந்நூறு ஆண்டுகளின் முன்னே

எங்கள் நிலத்தில் அவர்களுக்காய் உழுதோம்

முன்னூறு ஆண்டுகளின் பின்னே (சுதந்திரம் கிடைத்த பிறகும்) நாங்கள் உழுகிறோம் எங்கள் நிலத்தில் அவர்களுக்காய்'' இது எவ்வளவு வேடிக்கை? எத்தகைய பலவீனம்? என்ன மாதிரியான முட்டாள்தனம்!

## 3

1948க்குப் பின்பு இலங்கை சுதந்திரமடைந்தது. சுதந்திர இலங்கையில் என்ன நடந்தது?

நாட்டைச் சுயாதீனமான விடுதலைப் பாதையில் முன்னேற்றப்பாதையில் வழி நடத்தவில்லை. பதிலாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வசதியாக இனவாதம் முதலீடாக்கப்பட்டது. சமத்துவத்துவமும் பன்மைத்துவத்துவமும் நிராகரிக்கப்பட்டது. அதிகாரத்துக்கு வந்தோர் யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளத் தவறினர். பின் தங்கிய ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்த மக்களை மேலும் ஒடுக்க முற்பட்டனர்.

அரசாங்கத்தின் இத்தகைய அணுகுமுறையைக் குறித்த மக்களின் மாற்று அபிப்பிராயங்களையும் எதிர்ப்புணர்வுகளையும் படைகளைக் கொண்டு அடக்க முற்பட்டனர். எல்லாவற்றுக்குமான தீர்வாக இராணுவச் சிந்தனையை முன்னிறுத்தினர்.

இதை எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் 1948க்குப் பிந்திய வரவு செலவுத்திட்டத்தை ஆராய்ந்து கொள்ளுங்கள். உற்பத்திக்கும் சேவைத் துறைக்கும் ஒதுக்கப்பட்ட நிதியை விட அவற்றின் மீது செலுத்தப்பட்ட கவனத்தை விட படைத்துறைக்கு ஒதுக்கப்பட்ட பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி விகித அடிப்படையில் அதிகமானது.

இது தவறுகள் எல்லாவற்றையும் படைகளின் மூலமாகச் சரியாக்கி விடலாம் என்ற இராணுவச் சிந்தனையின் வெளிப்பாடாகும்.

இதற்குச் சமாந்தரமாக மறுபுறத்தில் மோசமான அரசியலமைப்பு வலிந்து உருவாக்கப்பட்டது.

இதற்கெல்லாம் ஒவ்வொரு தேர்தலிலும் மக்கள் தெரிந்தோ தெரியாமலோ ஆதரவளித்தனர். மக்களின் இந்தத் தவறுதான் மிகப் பெரிய தவறும் இன்றைய தண்டனையுமாகும். இதனால் பிரிவினைக் கோரிக்கை வலுப் பெற்றது. கூடவே அரசுக்கும் ஆட்சிக்கும் எதிரான ஜே.வி.பியின் போராட்டம் தொடக்கம் தமிழ் இயக்கங்களின் போராட்டம் வரை உருவாகின. விளைவாக லட்சக்கணக்கான இளைய தலைமுறையினர் (சனங்களின் ஒரு பகுதியினர்) கொன்று குவிக்கப்பட்டனர். அல்லது அரசியற் போராட்டங்களில் தங்கள் இன்னுயிரை இழந்தனர். மட்டுமல்ல பல ஆயிரக்கணக்கானோர் உடல் உறுப்புகள் சிதைக்கப்பட்ட நிலையில் முடக்கமாகினர். ஏனையோர் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். இதற்கு நிகராக இன்னொரு தொகுதியினர் லட்சக்கணக்கானோர் படைகளில் குவிக்கப்பட்டனர்.

ஒரு சின்னஞ்சிறிய நாடு தன் சக்திக்கு மீறியதாக இத்தகைய இழப்பைச் சந்தித்தது. பாருங்கள், மக்களுடைய தவறான அரசியல் ஆதரவு எவ்வளவு மோசமான எதிர்விளைவுகளை உண்டாக்கியிருக்கிறது என்று.

இது இலங்கையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திப் பின்தள்ளியது. ஆற்றலும் திறனும் ஆளுமையும் கொண்டோரை உற்பத்தியில் இருந்து விலக்கியது. இங்கே நாம் மிக ஊன்றிக் கவனிக்க வேண்டிய விசயம் ஒன்றுண்டு.



கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
கருணாகரன்

ஒரு நாட்டின் முக்கியமான வளங்கள் இரண்டாகும். ஒன்று அதனுடைய இயற்கை வளம். இரண்டாவது, அதனுடைய மனித வளம். இந்த மனித வளமே இயற்கை வளத்தைப் பயன்பொருத்தமாகப் பயன்படுத்தக் கூடியது. அதற்குப் பெறுமானத்தைச் சேர்க்கக் கூடியது. இதிலும் இளைய தலைமுறையின் ஆற்றலும் அறிதிறனும் முக்கியமானது. இங்கே 1970க்குப் பின்னர் நடந்த போராட்டங்களிலும் போரிலும் பல லட்சக்கணக்கான இளையோரின் ஆற்றல் வீணடிக்கப்பட்டது. அல்லது திசைமாற்றப்பட்டது. அதாவது உற்பத்திக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் பயனாக அமையவில்லை. இதனால் நாடு பிற சக்திகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. ஒரு பக்கம் போரினால் உண்டான கடன். மறுபக்கம் உற்பத்தியற்ற நிலை. இது இரண்டும் நாட்டுக்குப் பாதகமான சூழலை உருவாக்கியது.







இதன் இறுதி விளைவாக இன்று சுதந்திரத்துக்குப் பிந்தி ஆட்சி நடத்தியவர்கள் மீளவும் நாட்டை வெளிச் சக்திகளின் கீழ் கொண்டு போய் விட்டுள்ளனர்.


## 4

இப்பொழுது இலங்கையில் சீனாவும் இந்தியாவும் நேரடியாக பகிரங்கமாகவே முதலீடுகளைச் செய்கின்றன. நிலத்தைக் குத்தகைக்கு எடுக்க முற்படுகின்றன. இதன் அண்மைய நிகழ்ச்சியாக(20ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அதை செய்ய முடியாத சூழ்நிலை வரும். எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கி சென்றாலும் மற்றவர்கள் விடாமல் வம்புக்கு இழுப்பர். எனவே கவனமாக இருப்பது நல்லது. நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். புதிய ஆர்டர்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். வாக்கு வன்மையால் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக தள்ளிப்போன பதவி உயர்வு, வர வேண்டிய பணம் வந்து சேரலாம். குடும்பத்தில் எதிர்பார்த்த சுமுகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தருவதாக இருக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இழுபறியான நிலை காணப்படும். சாதாரணமாக பேசினாலும் மற்றவர்கள் அதில் குறை காண்பர். ஆயுதங்களை கையாளும் போது கவனம் அவசியம். பணவரத்து கூடும். தொழில், வியாபாரத்தில் சிக்கல்கள் தீர பாடுபடுவீர்கள். புதிய ஆர்டர் பிடிக்க அதிகம் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். செயல் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே இடைவெளி குறைய மனம் விட்டு பேசுவது நல்லது. பிள்ளைகள் எதிர்கால நலனுக்காக பாடுபட வேண்டி இருக்கும். பெண்களது செயல்களில் குடும்பத்தினர் குறை காண நேரலாம்.




மிதுனராசி அன்பர்களே! எதிர்பாராத திருப்பம் உண்டாகும். காரியங்களில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. புதியநபர்களின் அறிமுகம் கிடைக்கும். அவர்களிடம் கவனமாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து நிதானமாக நடந்து கொள்வது வியாபாரம் நன்கு நடக்க உதவும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் நல்ல பலன் தரும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். உறவினர்களுடன் அனுசரித்து செல்வதும், வாக்கு வாதத்தை தவிர்ப்பதும் நல்லது. பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது நல்லது. பெண்களுக்கு காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.




கடகராசி அன்பர்களே! வீண்செலவுகள் ஏற்படும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடு பட வேண்டி இருக்கும். மற்றவர்களின் பிரச்னைகளுக்கு வலிய சென்று உதவிகள் செய்வதை தவிர்ப்பது நல்லது. விருப்பம் இல்லாத இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்தபடி பணிகள் முடியாமல் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




சிம்மராசி அன்பர்களே! குறிக்கோளற்ற பயணங்கள் அதன் மூலம் அலைச்சல் ஏற்படும். திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. மனதில் வீண்கவலைகள் உண்டாகக் கூடும். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபசெலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடந்தாலும் சற்று நிதானமாக இருக்கும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலான வேலை பளுவால் உடல் சோர்வடைவார்கள். குடும்பத்தில் இறுக்கமான சூழ்நிலை காணப்படும். மனதில் இருப்பதை வெளியில் சொல்லாமல் செய்கையில் காட்டுவார்கள். பெண்களுக்கு வீண்கவலைகள், எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். கடன் பிரச்னைகளில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையும், அதனால் நன்மையும் இருக்கும்.




கன்னி ராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக வாங்க திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். எதிர்பாராத அதிர்ஷ்டமும் கிடைக்கலாம். உடல்ஆரோக்யம் உண்டாகும். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியும், ஆலோசனையும் கிடைக்கும். புதிய வேலைக்கான முயற்சிகளில் சாதகமான போக்கு காணப்படும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் அறிவுதிறன் அதிகரிக்கும். பெண்களுக்கு நன்மை உண்டாகும். முயற்சிகள் நல்ல பலன் தரும்.








துலாம்ராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும்.எல்லா பிரச்னைகளிலும் நல்ல தீர்வு கிடைக்கும். வாகனங்களை ஓட்டி செல்லும் போது கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றத்தை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவிக்கிடையே சுமூக உறவு இருக்க விட்டு கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகள் கல்வியில் அக்கறை காட்டுவீர்கள். பெண்களுக்கு மனத்துணிவு அதிகரிக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும்.புதிய நண்பர்களுடன் பழகும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். புதிய ஆர்டர்களுக்கான முயற்சிகள் சாதகமான பலன் தரும். மனோதைரியம் கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலக பணிகள் மூலம் டென்ஷன் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையில் வாக்கு வாதங்கள் ஏற்படலாம். கவனம் தேவை. அக்கம் பக்கத்தினருடன் சில்லறை சண்டைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை வரலாம். பெண்கள் அடுத்தவர்களின் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தெய்வபக்தி அதிகரிக்கும்.




தனுசுராசி அன்பர்களே! ஆக்கப்பூர்வமான யோசனைகள் தோன்றினாலும் அதை செயல்படுத்துவதில் தாமதம் உண்டாகும். கோபத்தை கட்டுப்படுத்தி கொள்வது நல்லது. மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படாமல் கவனமாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். ஆர்டர் தொடர்பான காரியங்களில் தாமதம் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வேலைபளு இருக்கும். சக ஊழியர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினதிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை. பெண்கள் வீண் பேச்சை குறைப்பது நல்லது. மாணவர்கள் அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்வதில் கவனம் தேவை.




மகரராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். பணவரத்து திருப்தி தரும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். வாகனங்களை ஓட்டி செல்லும் போது கவனம் தேவை. பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது அவசியம். தனிமையாக இருக்க நினைப்பீர்கள். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். ஆர்டர்கள் கிடைத்தாலும் சரக்குகள் அனுப்புவது தாமதமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. பதவி உயர்வு, நிலுவையில் உள்ள பணம் வருவது தாமதப்படும். குடும்பத்தில் ஏதேனும் குழப்பம் ஏற்படலாம். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை வந்து நீங்கும். உறவினர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. பெண்கள் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது.




கும்பராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். பணவரத்து திருப்தி தரும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். வாகனங்களை ஓட்டி செல்லும் போது கவனம் தேவை. பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது அவசியம். தனிமையாக இருக்க நினைப்பீர்கள். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். ஆர்டர்கள் கிடைத்தாலும் சரக்குகள் அனுப்புவது தாமதமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. பதவி உயர்வு, நிலுவையில் உள்ள பணம் வருவது தாமதப்படும். குடும்பத்தில் ஏதேனும் குழப்பம் ஏற்படலாம். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை வந்து நீங்கும். உறவினர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. பெண்கள் கூடுதல் கவனத்துடன் செயல்படவும்.




மீனராசி அன்பர்களே! வீண் செலவுகள் உண்டாகும். மற்றவர்களால் மனகஷ்டம் ஏற்படும். அடுத்தவர்கள் கடனுக்கு பொறுப்பேற்காமல் இருப்பது நல்லது. எந்த ஒரு காரியமும் மந்தமாக நடக்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் வராவிட்டாலும், சுமாராக வரும். ஆனால் புதிய ஆர்டர்கள் வந்து சேரும். தொழில் தொடர்பான செலவு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறிய வேலைக்கும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. அவர்களின் நலனுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் திடீர் இடை வெளி ஏற்படலாம். பிள்ளைகள் அறிவு திறன் கண்டு ஆனந்தப்படுவீர்கள். பெண்களுக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும். காரியதாமதம் ஏற்படும். வீண்கவலை இருக்கும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022

#1 RE/MAX

# Buying / Selling / Leasing

வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..

கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்

CONSUMER CHOICE AWARD 2019 GTA EAST


## SOLD

Ellesmere/ Calverley/Morrish

SOLD 1,860.000




Detached 2-Storey
Bedrooms: 4 + 1
Washrms: 4
Kitchens: 1 + 1
Seperate Entrance



This Home Is An Absolute Beauty!!
Clean, Bright, Spacious !!!

Location !!! 4 + 1 Bedrooms + Exercise & Office Rooms , 4 Washrooms, Over 3300 Sft Living Space With Finished Legal Basement Custom Kitchen With Large Island Hardwood Floor & Smooth Ceiling Throughout ,Wainscoting & Crown Moulding , Family Room With Wood Burning Fire Place , Roof In 2021 ,No Sidewalk, For 6 Cars, Steps To U Of T,Centennial College,Toronto Pan Am Centre,Major Hwy,Ttc,Parks, Hospital, Public & Catholic Schools... Extras:S/S Fridge, Stove,Double Ovens Elfs,Existing Window Blinds,Dishwasher,Washer/Dryer Soaker Tub & Stand Up Shower,Finished Legal Basement With Custom Kitchen, All Ceiling Fans , Excluded :Washer & Dryer In The Basement And Water Softener

$ 988,000




Morningside & 401
Detached 2-Storey
Bedrooms: 3 + 2
Washrooms: 4
Updated

$ 999,000





Sheppard Ave E/Rouge River Dr
Semi-Detached 2-Storey
Bedrooms: 4 + 1
Washrooms: 4
Sep Entrance/ Original Owner!

$ 999,999




Mccowan / Ellesmere
Detached Bungalow
Bedrooms: 3
Washrooms: 1
Well Maintained

$ 1,099,999




Bellamy & Lawrence
Detached Bungalow
Bedrooms: 3 + 4 Wrms: 3
Sep Entrance/
50Ft X130Ft Corner Lot

$ 1,499,000




Conlins & Ellesmere
Detached 2-Storey
Bedrooms: 4
Washrooms: 3
Highland Creek Neighbourhood!

$ 998,000





Victoria Park & 401
Detached Bungalow
Bedrooms: 3 + 1. Wrms: 2
Sep Entrance/
Bsmt W/Rare 8 Ft Ceilings

$ 1,088,800




Birchmount And Mcnicoll
Detached 2-Storey
Bedrooms: 3 + 1
Washrooms: 3
No Neighbours To The Back Of You!

$ 990,000




Mccowan Rd. / Steeles Ave.
Detached 2-Storey
Bedrooms: 4 + 1
Washrooms: 4
Well Maintained

$ 998,000




Mccowan Rd. / Denison
Detached 2-Storey
Bedrooms: 3 + 1
Washrooms: 3
Sep Entrance/ Renovated

$ 1,499,000





Raymerville / Mccowan Rd.
Detached 2-Storey
Bedrooms: 3 + 1
Washrooms: 4
Ravine / Renovated

$ 1,288,000





Altona & Pinegrove
Detached 2-Storey
Bedrooms: 4 + 1
Washrooms: 4
W/O- Renovated

$ 1,100,000





Hwy 2 / Rotherglen
Detached 2-Storey
Bedrooms: 4
Washrooms: 3
Walk-Out/ Well Maintained

$ 675,000




Churchill Ave & Somerville Ave.
Detached Bungalow
Bedrooms: 3 + 1
Washrooms: 2
W/O – Lot: 79 x 100.39 Feet

$ 899,000




Mearns Ave / Sprucewood Cres.
Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 4
Upgraded

$ 699,900




Markham Rd./Sheppard Ave.
Condo Townhouse
Bedrooms: 2
Washrooms: 2
5 Years New

(Mortgage) அடமான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்



கமல் நவரட்ணம்

KAMAL NAVARATNAM
Sales Representative

Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage

Office:
416-287-2222
Fax:
416-282-4488
1265 Morningside Ave.,
Suite 203, Toronto,
ON M1B 3V9

*Trusted and reliable services*


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7